விலை: 30.00
பக்கங்கள் - 24

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 03 சனிக்கிழமை (18.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212







## வீதி விபத்தில் படுகாயமடைந்தவர்

### சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்

23

## விரிவுரையாளர் பதவியிலிருந்து விலகினார் குருபரன்



(யாழ்ப்பாணம்)

கலாநிதி குமாரவடிவேல் குருபரன் யாழ் பல்கலைக்கழகத்தின் சட்ட விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகுவதற்கான இராஜினாமாக் கடிதத்தை நேற்று பல்கலைக் கழக தலைமை பீடத்திற்கு கலைப்

23

குளிரூட்டப்பட்ட

## காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவை இரத்து

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - காங்கேசன்துறை இடையேயான குளிரூட்டப்பட்ட நகர்சேர் தொடருந்து சேவை இந்த வாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக

23

## ராஜாங்கனையில் 12 வயதுடைய ஒருவருக்கு கொரோனா

(கொழும்பு)

ராஜாங்கனையில்12வயதுஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று

23

# யாழ்.தீவகத்தில் கஞ்சா பதுக்கல்

## கொழும்புக்கு புலனாய்வு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்.குடாநாட்டுக்கு கடத்தப்படும் கஞ்சா போதைப் பொருள் யாழ்.தீவகப் பகுதிகளில் பதுக்கி வைக்கப்படுவதாக அரச புலனாய்வுப் பிரிவினரால் கொழும்புக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடும் மிகப்பெரும் புள்ளி மண்டைதீவு மற்றும் அல்லைப்பிட்டி பகுதிகளில் நடமாடி வருவதாக அரச புலனாய்வுப் பிரிவினரால் கண்டறியப்பட்டு கொழும்புக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

எனினும் அந்தப் புள்ளியின் உடைமையில் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்படாததால் கைது செய்ய முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

23

2 வயது குழந்தைக்கு

## கம்பளையில் கொரோனா

(கொழும்பு)

கம்பளை பம்பரதெனிய பிரதேசத்தில் இரண்டு வயது குழந்தை ஒன்றிற்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அரஜுன திலகரத்ன தெரிவித்துள்ளார்.

கந்தக்காடு புனர்

23

## பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சுகாதார நடைமுறைகள் அடங்கிய விசேட வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டுதல்களைக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

23

கொலை செய்யும் நோக்குடன்

## கைக்குண்டுடன் பயணித்த சந்தேகநபர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், ஒருவரைக் கொலை

23









நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாக்குப் போட்ட சீட்டை

# படமெடுத்து பதிவேற்றிய இருவர் முல்லையில் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் அரச ஊழியர் ஒருவரும் அவருடைய நண்பர் ஒருவரும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

புதுக்குடியிருப்பில் ஊழியர் ஒருவர் தான் அளித்த தபால் மூல வாக்குச் சீட்டின் ஒளிப்படத்தினை தனது நண்பர் ஒருவருக்கு அனுப்பியதன் பலனாகவே அவரும் நண்பரும் கைதாகியிருக்கின்றனர்.

வாக்களித்த ஊழியரிடம் வாக்குச் சீட்டின் படத்தினைப் பெற்றுக்கொண்ட அவருடைய நண்பர், "என்னுடைய நண்பன் ஒருவன் தன்னுடைய வாக்கினைச் செலுத்திவிட்டு புகைப்படம் மூலம் தன்னுடைய நாணயத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்" எனக் குறிப்பிட்டு வாக்குச் சீட்டில் புள்ளடியிடப்பட்ட படத்தினையும் இணைத்து பதிவேற்றியிருக்கின்றார்.

சம்பவத்தை அடுத்து பொலிஸார் பதிவேற்றியவரையும் அரச ஊழியரையும் கைது செய்துள்ளனர். (ம-3)


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் பின்வரும் கால்நடைகள் 27.07.2020 அன்று திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள்:-

| இல. | இலக்கம் | இனம் | வயது | கடா/ மறி |
|---|---|---|---|---|
| 01 | 4303-0919-0013 | உள்ளூர் | 6 years | மறி |
| 02 | 4303-0919-0014 | உள்ளூர் | 6 years | மறி |
| 03 | 4303-0919-0015 | உள்ளூர் | 6 years | மறி |
| 04 | 4303-0919-0018 | ஜமுனாபாரி கலப்பு | 6 years | மறி |
| 05 | 4303-0919-0024 | உள்ளூர் | 5 years 9 months | மறி |
| 06 | 4303-0919-0031 | உள்ளூர் | 5 years 6 months | மறி |
| 07 | 4303-0919-0032 | உள்ளூர் | 5 years 6 months | மறி |
| 08 | 4303-0919-0034 | உள்ளூர் | 5 years 5 months | மறி |
| 09 | 4303-0919-0035 | உள்ளூர் | 5 years 5 months | மறி |
| 10 | 4303-0919-0040 | உள்ளூர் | 3 years 10 months | மறி |
| 11 | 4303-0919-0042 | உள்ளூர் | 3 years 9 months | மறி |
| 12 | 4303-0919-0043 | உள்ளூர் | 3 years 9 months | மறி |
| 13 | 4303-0919-0045 | உள்ளூர் | 3 years 8 months | கடா |
| 14 | 4303-0919-0048 | உள்ளூர் | 3 years 8 months | கடா |
| 15 | 4303-0919-0054 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 7 months | கடா |
| 16 | 4303-0919-0055 | உள்ளூர் | 3 years 7 months | மறி |
| 17 | 4303-0919-0057 | உள்ளூர் | 3 years 6 months | கடா |
| 18 | 4303-0919-0059 | உள்ளூர் | 2 years 8 months | மறி |
| 19 | 4303-0919-0060 | உள்ளூர் | 3 years 4 months | மறி |
| 20 | 4303-0919-0063 | உள்ளூர் | 3 years 4 months | மறி |
| 21 | 4303-0919-0064 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 4 months | கடா |
| 22 | 4303-0919-0071 | உள்ளூர் | 2 years 9 months | கடா |
| 23 | 4303-0919-0077 | உள்ளூர் | 2 years 9 months | கடா |
| 24 | 4303-0919-0078 | உள்ளூர் | 2 years 9 months | மறி |
| 25 | 4303-0919-0080 | ஜமுனாபாரி கலப்பு | 2 years 9 months | கடா |
| 26 | 4303-0919-0081 | உள்ளூர் | 2 years 9 months | மறி |
| 27 | 4303-0919-0083 | உள்ளூர் | 2 years 9 months | கடா |
| 28 | 4303-0919-0086 | ஜமுனாபாரி கலப்பு | 2 years 7 months | கடா |
| 29 | 4303-0919-0088 | உள்ளூர் | 2 years 7 months | கடா |
| 30 | 4303-0919-0091 | உள்ளூர் | 2 years | கடா |
| 31 | 4303-0919-0092 | உள்ளூர் | 2 years | கடா |
| 32 | 4303-0919-0098 | ஜமுனாபாரி கலப்பு | 2 years | மறி |
| 33 | 4303-0919-0100 | உள்ளூர் | 2 years | மறி |
| 34 | 4303-0919-0108 | ஜமுனாபாரி கலப்பு | 1 year 10 months | கடா |
| 35 | 4303-0919-0109 | உள்ளூர் | 1 year 8 months | கடா |
| 36 | 4303-0919-0110 | உள்ளூர் | 1 year 7 months | கடா |
| 37 | 4303-0919-0112 | ஜமுனாபாரி கலப்பு | 1 year 7 months | மறி |
| 38 | 4303-0919-0119 | உள்ளூர் | 1 year 7 months | கடா |
| 39 | 4303-0919-0120 | உள்ளூர் | 1 year 7 months | மறி |
| 40 | 4303-0919-0124 | உள்ளூர் | 1 year 3 months | கடா |
| 41 | 4303-0919-0126 | உள்ளூர் | 1 year 3 months | கடா |
| 42 | 4303-0919-0129 | உள்ளூர் | 1 year 3 months | மறி |
| 43 | 4303-0919-0130 | உள்ளூர் | 1 year 2 months | கடா |
| 44 | 4303-0919-0131 | உள்ளூர் | 1 year 1 month | மறி |
| 45 | 4303-0919-0133 | உள்ளூர் | 1 year 1 month | மறி |
| 46 | 4303-0919-0134 | உள்ளூர் | 1 year 1 month | கடா |
| 47 | 4303-0919-0137 | உள்ளூர் | 1 year | கடா |
| 48 | 4303-0919-0138 | உள்ளூர் | 1 year | மறி |
| 49 | 4303-0919-0148 | உள்ளூர் | 10 months | கடா |
| 50 | 4303-0919-0153 | உள்ளூர் | 09 months | கடா |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 24.07.2020 (வெள்ளிக்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். ஏல விற்பனையானது 27.07.2020 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

(C-9909) **பதிவாளர்**



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் பின்வரும் கால்நடைகள் 27.07.2020 அன்று திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மாடுகள்:-

| இல. | அடையாள இலக்கம் | இனம் | வயது | நாம்பன் / பசு |
|---|---|---|---|---|
| 01 | 4303-0919-0037 | ஜமுனாபாரி கலப்பு | 4 years 06 months | நாம்பன் |
| 02 | 4303-0919-0050 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 03 months | நாம்பன் |
| 03 | 4303-0919-0051 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 03 months | நாம்பன் |
| 04 | 4303-0919-0053 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 01 month | நாம்பன் |
| 05 | 4303-0919-0054 | ஜமுனாபாரி கலப்பு | 3 years | நாம்பன் |
| 06 | 4303-0919-0055 | ஜமுனாபாரி கலப்பு | 2 years 10 months | நாம்பன் |
| 07 | 4303-0919-0058 | ஜமுனாபாரி கலப்பு | 2 years 09 months | நாம்பன் |
| 08 | 4303-0919-0059 | ஜமுனாபாரி கலப்பு | 2 years 08 months | நாம்பன் |
| 09 | 4303-0919-0066 | ஜமுனாபாரி கலப்பு | 2 years 01 month | நாம்பன் |
| 10 | 4303-0919-0001 | ஜமுனாபாரி கலப்பு | 11 years | பசு |
| 11 | 4303-0919-0003 | ஜமுனாபாரி கலப்பு | 08 years | பசு |
| 12 | 4303-0919-0005 | ஜமுனாபாரி கலப்பு | 12 years | பசு |
| 13 | 4303-0919-0007 | ஜமுனாபாரி கலப்பு | 11 years | பசு |
| 14 | 4303-0919-0044 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 08 months | பசு |
| 15 | 4303-0919-0046 | ஜமுனாபாரி கலப்பு | 3 years 08 months | பசு |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 24.07.2020 (வெள்ளிக்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏலவிற்பனையானது 27.07.2020 திங்கட்கிழமை காலை 10:00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

(C-9910) **பதிவாளர்**



## வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் விடுக்கப்படும் அறிவித்தல்

எதிர்வரும் 2020-07-20ஆம் திகதி திங்கட்கிழமை ஆடி அமாவாசைத் தினத்தை முன்னிட்டு பிதிர்க்கடன் நிறைவேற்றும் பொதுமக்கள் தற்போது நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையான covid19 நோய்த் தடுப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாகத் தமது பிரதேசத்திற்கு அருகிலுள்ள தீர்த்தக்கரையில் பிதிர்க் கடன்களை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்வதுடன் அவ்வாறு தங்கள் பிரதேசங்களில் பிதிர்க் கடனை நிறைவேற்றுவதற்கு வசதி இல்லாதவர்கள் மட்டும் கீரிமலை தீர்த்தக்கேணியில் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு சமூகமளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நிபந்தனைகள்

01. பிதிர்க்கடன் நிறைவேற்றுவோர் மட்டும் அனுமதிக்கப்படுவர். அத்துடன் ஏனையோரை அழைத்து வருவதை தவிர்த்தக் கொள்ளவும்.
02. கடமை நிறைவேற்றும் குருக்கள்மார் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ள வேண்டும். முற்பதிவினை மேற்கொண்ட 25 குருக்கள்மார் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
03. சகல வியாபாரங்களும் தடை செய்யப்பட்டுள்ளது.
04. Covid 19 நோய்த் தடுப்பிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் முகக்கவசம் அணிந்து வருகை தரவேண்டும்.
05. கீரிமலை தீர்த்தக்கேணிக்கு பிரவேசிப்பதற்கு முன் உடல் வெப்பநிலையினை பரிசோதிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பரிசோதனை செய்த பின்னரே உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.
06. பிதிர்க்கடன் நிறைவேற்ற வருவோர் உள்நுழைவதற்கு முன் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.
07. பொதுமக்கள் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்.
08. குறிப்பிட்ட நேரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவினரே உள்வாங்கப்படுவர்.

(C-9908)

**திரு.சோ.சுகிர்தன் -தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை**



## யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் 2018/2019ம் ஆண்டிற்கான பொதுச் சபைக் கூட்டமும் புதிய பணிப்பாளர் சபைத் தெரிவும்

இன்று மாலை 6 மணிக்கு (18.07.2020) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள US விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ள **யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின்** (CCIY) பொதுச் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபைத் தெரிவு இடம் பெறவுள்ளது.

எமது மன்றத்தின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் இக்கூட்டம் தொடர்பான அறிவித்தல் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எமது மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள். (C-9911)

**பிரதம நிறைவேற்று அதிகாரி**
**யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்**

# மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையில் பாரிய வீழ்ச்சி

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கவலை



(கொழும்பு)

**நாட்டில் மனித உரிமைகள் விடயத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப் கவலை வெளியிட்டுள்ளார்.**

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ரப், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில், டொமினிக் ரப் மேலும் கூறியுள்ளதாவது, "ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றது.

மேலும் முக்கிய பொறுப்புக்களுக்கு சர்ச்சைக்குரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையானது, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் குறித்த அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு தொடர்பாக கேள்விகளை எழுப்பியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து சிவில் சமூகத்தினர் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் கண்காணிக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் பலவற்றில் முன்னேற்றம் அவசியம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்க மறுக்கும் நிறுவனங்கள் தொடர்பாக முறையிடுங்கள்

## கபே கோரிக்கை

(கொழும்பு)

வாக்களிப்பதற்கு தனியார் நிறுவனங்களிடமிருந்து விடுமுறை பெறுவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் தம்மிடம் முறைப்பாடு செய்யுமாறு மக்களிடம் கபே அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

கபே அமைப்பின் முறைப்பாட்டு பிரிவு, குறித்த முறைப்பாடுகளை ஏற்குமென அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார். அத்துடன் குறித்த முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தேர்தலிலும் பல தனியார் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களின் வாக்குரிமையை மீறுகின்றன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இது ஒரு பாரதூரமான நிலையென குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம், தாம் வாழும் பிரதேசத்திற்கு ஏற்ப விடுமுறையைப் பெற்றுக்கொள்வது ஊழியர்களின் உரிமையென குறிப்பிட்டுள்ள அஹமட் மனாஸ், அதற்கேற்ப நிறுவனங்களின் தலைவர்கள் தமது ஊழியர்களுக்கு கட்டாயம் விடுமுறை வழங்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில், விடுமுறை வழங்க மறுக்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கபே அமைப்பு செயற்படுவதாகவும், ஆகவே அவ்வாறான முறைப்பாடுகளை 011 4341524 என்ற தொலை பேசி இலக்கத்தினூடாக அல்லது 011 2866224 என்ற தொலை நகல் (FAX) இலக்கத்தின் ஊடாக அல்லது info@caffe srilanka.org மின்னஞ்சலூடாக கபே அமைப்பின் முறைப்பாட்டு பிரிவுக்கு அறிவிக்குமாறு அஹமட் மனாஸ் மக்கீன் கோரியுள்ளார். (ஐ-4)

# புதிய டிஜிற்றல் பிறப்பத்தாட்சி பத்திரத்தில் ஏற்படவுள்ள மாற்றம்

(கொழும்பு)

அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய டிஜிற்றல் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் பெற்றோர் திருமணமானவர்களா/இல்லையா? என்ற பகுதி நீக்கப்பட்டுள்ளதாக பதிவாளர்கள் நாயகம் எம்.சீ.விதானகே தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் புதிய டிஜிற்றல் பிறப்பத்தாட்சி பத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள அவர்,

அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய டிஜிற்றல் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் பெற்றோர் திருமணமானவர்களா/இல்லையா? என்ற பகுதி நீக்கப்பட்டுள்ளது.

இது பிள்ளைகளுக்குப் பாதிப்பானது என்பதால், பழைய பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் இருந்த இந்த பகுதியை புதிய பிறப்பத்தாட்சி பத்திரத்தில் உள்ளடக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

மக்களின் வசதிகளுக்காக இம்மாத இறுதிக்குள் பிறப்பு, மரணம் மற்றும் திருமணப் பதிவு சான்றிதழ்களின் பிரதிகளை வழங்கும் அலுவலகம் ஒன்றை குடிவரவு, குடியகல்வு திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம் ஆகியன அமைந்துள்ள சுஹுருபாயவில் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பதிவாளர்கள் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# தமிழர் எதிர்பார்க்கும் தீர்வுக்கு ராஜபக்ஷ அரசில் இடமில்லை!

## கெஹலிய திட்டவட்டம்

(கொழும்பு)

தமிழ் மக்களோ அல்லது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரோ விரும்புகின்ற தீர்வை ராஜபக்ஷ அரசு வழங்கமாட்டாது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

"தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். எனவே, தமிழர்களுக்கான உரிமைகளைளுக்கான, அரசியல் தீர்வை அரசு வழங்கியே ஆகவேண்டும். அது அரசின் கடமையாகும். அதற்காக அரசிடம் நாம் அடிபணியமாட்டோம். தமிழ் மக்கள் விரும்பும் நியாயமான தீர்வை வழங்க அரசு முன்வந்தால் அதை நாம் மனதார ஏற்போம்" என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ராஜபக்ஷ அரசின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள். முஸ்லிம்களும் இந்த நாட்டின் பிரஜைகள். சிங்களவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள். எனவே, எமது புதிய ஆட்சியில் தமிழர்களுக்கெனத் தனியான அரசியல் தீர்வை எம்மால் வழங்க முடியாது.

தமிழ் மக்களோ அல்லது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரோ விரும்புகின்ற தீர்வையும் எம்மால் வழங்க முடியாது.

தமிழ் - முஸ்லிம் - சிங்களம் என மூவின மக்களுக்கும் உரித்தான தீர்வை மட்டுமே எம்மால் வழங்க முடியும்.

நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு அங்கீகாரத்துடனேயே இந்தத் தீர்வை வழங்குவோம்.

"அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வு" என்று சம்பந்தன் கேட்பது சமஷ்டி தீர்வே. இந்த சமஷ்டி தீர்வுக்கு ராஜபக்ஷ அரசில் இடமேயில்லை" என உறுதிபடத் தெரிவித்தார். (ஐ-4)

# கொரோனா நோயாளி கலந்து கொண்ட மரணச் சடங்கிற்கு சென்ற அமைச்சர்கள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் இம்முறை பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடும் அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன மற்றும் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ராஜாங்கனை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட முதலாவது கொரோனா நோயாளி கலந்து கொண்ட மரணச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்டதன் காரணமாகவே அவர்களை சுய தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மரணச் சடங்கில் கலந்து கொண்டு பலர் ஏற்கனவே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

என் கனவு யாழ்
நோக்கிய பயணம்...

# விவசாய பிரதி அமைச்சராக செய்த சேவைகள்

(ஆடி – மார்கழி 2018)

**140 நாட்கள்**

## 1 விவசாய மாதிரி கிராமம் (கரணவாய் மேற்கு)

- 20 விவசாய கிணறுகளை புனரமைத்தமை.
- விவசாய வேலிகள் அமைத்து கொடுத்தமை. (50% மானியம்)
- 20 வெங்காய சேமிப்பு கொட்டகைகள் அமைத்தமை.
- நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கியமை. (50% மானியம்)
- தெளி கருவிகளை வழங்கியமை. (50% மானியம்)
- நுண்நீர்ப்பாசன திட்டங்களை ஊக்குவித்தமை. (50% மானியம்)

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.15,933,000**

## 3 யாழ் விவசாய அபிவிருத்தி திட்டங்கள்

- பழ உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தை அமுல்படுத்தியமை.
- மானிய விலையில் வெங்காய சேமிப்பு கொட்டகைகள் வழங்கியமை.
- 18,000 வீட்டுத்தோட்டங்களை அமைப்பதற்குரிய செயற்றிட்டதை தொடங்கியமை
- "ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராமங்கள்" திட்டத்தினூடாக பல குளங்களை புனருத்தாரணம் செய்தமை
- விவசாய வீதிகள், விவசாய வேலிகள் அமைத்தமை
- தூவல் நீர்பாசனத்தினூடாக வெங்காயம் மற்றும் மிளகாய் உற்பத்தியை ஊக்கிவித்தமை

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.110,470,000**

## 5 விவசாய வலயங்களை ஸ்தாபிக்கும் அபிவிருத்தி திட்டம்

- இலங்கையின் முதலாவது மாம்பழ உற்பத்தி வலயத்தை நிறுவியமை.
- முல்லைத்தீவு நிலக்கடலை உற்பத்தி வலயத்தை நிறுவியமை.
- வவுனியாவில் உளுந்து உற்பத்தி வலயத்தை நிறுவியமை.
- 550 ஏக்கர் நிலப்பரப்பில் பாரம்பரிய நெல் உற்பத்தி வலயத்தை நிறுவியமை.
- யாழ் உருளைக்கிழங்கு உற்பத்தி அபிவிருத்தி வலயத்தை ஆரம்பித்தமை.
- கவண்டிஷ் ஏற்றுமதி வாழை உற்பத்தி அபிவிருத்தி வலயத்தை ஆரம்பித்தமை

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.28,000,000**

## 7 விவசாய நவீனமயமாக்கல் திட்டம் (Agriculture Modernization Project)

- சாவகச்சேரியில் ரூ. 48 மில்லியன் செலவில் 200 விவசாயிகளுக்கு 100 ஏக்கரில் (Tom EJC) மாம்பழ வலயத்தை நிறுவியமை.
- ஊடுபயிராக நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பச்சை மிளகாய் செய்கையை ஊக்கிவித்தமை.
- ரூ. 20 மில்லியன் செலவில் முத்தையன்கட்டு, பேராறு பிரதேசத்தில் கொங்கிறீட் வாய்க்கால் மீள்கட்டுமான திட்டத்தை ஆரம்பித்தமை.
- ரூ. 10 மில்லியன் செலவில் முத்தையன்கட்டு . வலதுகரை 3ஆம் கண்டத்தில் வாய்க்காலின் மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்தமை.
- சாவகச்சேரி பிரதேசத்திற்குட்பட்ட 2 கி.மீ நீளமான விடத்தல்பளை - கிளாலி மற்றும் கெற்பேலி இணைப்பு வீதிகளை புனரமைத்தமை.

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.311,690,000**

## 2 விசேட விவசாய கிணறுகள் அமைக்கும் திட்டம்

- ரூ.86 மில்லியன் பெறுமதியான விசேட விவசாய கிணறுகளை வடமாகாணத்தில் அமைத்து கொடுத்தமை.
- ரூ.9.6 மில்லியன் பெறுமதியான விசேட விவசாய கிணறுகளை கிழக்கு மாகாணத்தில் அமைத்து கொடுத்தமை.

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.86,000,000**

## 4 விசேட விவசாய அபிவிருத்தி திட்டம்

வினைத்திறனான உற்பத்திக்கு தரமான விதைகளை இலவசமாக வழங்கியமை.

பழ உற்பத்தியில் உயரிய விளைச்சலை அடையும் பொருட்டு தரமான நடுகை பொருட்களை இலவசமாக வழங்கியமை.

உர பாவனையை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு 10,000 இலை வர்ண விளக்கப்படத்தை இலவசமாக வழங்கியமை.

வீட்டுத்தோட்ட மட்டத்தில் பச்சை மிளகாய் உற்பத்தியை பெருக்குவதற்கு 250,000 வளர்ப்பு பைகளை இலவசமாக வழங்கியமை.

வணிக ரீதியிலான மாம்பழ உற்பத்தியை ஊக்கிவிக்க இலவச மாமரக் கன்றுகளை வழங்கியமை.

சூரிய மின்சக்தியில் இயங்கும் நீர் பம்பிகளை மானிய விலையில் வழங்கியமை.

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.48,000,000**

## 6 யாழ் உருளைக்கிழங்கு உற்பத்தி ஊக்குவிப்பு திட்டம்

- கடந்த 3 வருடங்களாக 50% மானிய விலையில் விதை உருளைக்கிழங்கை 2000+ விவசாயிகளுக்கு வழங்கியமை
- உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவிக்க ரூ. 1000 விசேட மானிய விலையில் உர விநியோகம் செய்தமை
- "யாழ் உருளைக்கிழங்கு" என்ற வர்த்தக நாமத்தை சிபாரிசு செய்தமை
- உற்பத்தி செய்யும் உருளைக்கிழங்கை கொள்வனவு செய்ய நேரடி சந்தை வாய்ப்பை ஏற்படுத்தியமை

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.10,000,000**

## 8 காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்

- முல்லைத்தீவில் புனரமைக்கப்படுகின்ற குளங்கள் - 106
- கிளிநொச்சியில் புனரமைக்கப்படுகின்ற குளங்கள் - 64
- விவசாயிகளின் மட்டத்தில் நீர்ப்பாசன வினைத்திறனை அதிகரித்தல்.
- பயிர்ச்செய்கையின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை அதிகரித்து சிறந்த நிலையான நீர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பழக்கங்களையும் நடைமுறைப்படுத்தல்.
- விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்காக ரூ. 8,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- விவசாயத்திற்கான நீர் அபிவிருத்திக்காக ரூ. 18,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
- திட்ட முகாமைத்துவ அமுலாக்கலுக்காக ரூ. 114 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட தொகை
**ரூ.26,114,000,000**



(C-057)

X 1

**அங்கஜன் இராமநாதன்**

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party

வடக்கின் துரித விவசாய மீளெழுச்சி...!

# இராசிபலன்

18.07.2020
ஆடி 03, சனிக்கிழமை
திரியோதசி பின்னிரவு 12.21 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 9.38 மணிவரை
சுபநேரம் 3.00 - 4.30 மணிவரை
இராகுகாலம் 9.00 - 10.30 மணிவரை
சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை வளவன்

**மேஷம்**: சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**ரிஷபம்**: சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்**: ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**சிம்மம்**: நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கன்னி**: தூரதேசத்திலிருந்து கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழில் ஆதாயம் காண முற்படுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**: உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**: அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**: சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணமொன்று இடம்பெறலாம்.

**மகரம்**: சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியங்கள் சாதித்துக் கொள்வீர்கள்.

**கும்பம்**: சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்**: தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் பாசத்திற்கு ஆளாவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கூடும்.

உன் திறமைகளைப் பிறர் புகழட்டும்.

# உத்தேச மேற்குக்கரை இணைப்புத்திட்டம் இஸ்ரேலிடம் இலங்கை முக்கிய கோரிக்கை



(கொழும்பு)
உத்தேச மேற்குக்கரை இணைப்புத் திட்டத்தை கைவிடுமாறு இலங்கை இஸ்ரேல் அரசாங்கத்தை கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பதில் நிரந்தரப் பிரதிநிதி தயானி மெண்டிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் 44 ஆவது அமர்வில் உரையாற்றியபோதே குறித்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.

பாலஸ்தீன மக்களின் நிலைமை குறித்து ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மைக்கேல் லிங்க் ஐக்கிய நாடுகள் அமர்வில் அறிக்கையொன்றினை முன்வைத்தார்.

குறித்த அறிக்கை தொடர்பாக ஆராய்ந்த இலங்கை, தனது நிலைப்பாட்டை பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர், மனித உரிமைகள் குழுவின் உயர்ஸ்தானிகர் மற்றும் இஸ்ரேலின் குறித்த திட்டம் தொடர்பாக விசாரிப்பதற்கான சிறப்புக் குழுவினரால் எழுப்பப்பட்ட கவலைகள் இலங்கை அரசாங்கத்தினால் பகிரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை, இஸ்ரேல் அரசாங்கத்தின் இணைப்புத்திட்டம், ஐக்கிய நாடுகளின் விதிமுறைகளை மீறும் செயல் எனவும் விமர்சனம் வெளியிட்டுள்ளது.

குறித்த உத்தேச இணைப்புத்திட்டத்தால், மேற்குக் கரை மற்றும் ஜோர்தான் பள்ளத்தாக்கு பகுதிகளில் வாழும் மனித உரிமைகளை பாதிக்கும் எனவும் குறித்த இனக்குழுவின் இடப்பெயர்வுக்கு வழி செய்யும் எனவும் சிறப்பு அறிக்கையாளர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த கருத்துக்களை இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பாக சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக அமைதிப்பேச்சுவார்த்தைகளைத்தொடர, இஸ்ரேல் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கை, குறித்த உத்தேச இணைப்பைக் கைவிடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஒன்றரை வயதுக்குழந்தை துஷ்பிரயோகத்தின் பின் கொலை

## விசேட விசாரணைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)
நீர்கொழும்பு, பெரியமுல்ல பகுதியில் ஒன்றரை வயது பெண் குழந்தை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கோரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெரியமுல்ல பகுதியில் உள்ள பாலமொன்றிற்கு அருகில் கடந்த 13 ஆம் திகதி குழந்தை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக குழந்தையின் தாயின் மறைமுகக் காதலனான 22 வயது இளைஞன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து குழந்தையின் தாயும் காதலனின் சகோதரர் ஆகியோரை குறித்த சம்பவத்துக்கு ஒத்துழைத்தமை மற்றும் தகவல் மறைப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயகுமார வுட்லர் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-4)

# கொரோனா கட்டுப்பாட்டுப் பணிகளிலிருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் விலகல்

(கொழும்பு)
கொரோனாக் கட்டுப்பாட்டுப் பணிகளில் இருந்து விலகுவதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் என்.



ரி.யு. ரோஹண அறிவித்துள்ளார்.

மக்கள் இன்னல்களுக்கு உட்படுவதைத் தவிர்ப்பதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அதிகாரம் வழங்கப் படமாட்டாது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இத்தகைய கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முதல் கொவிட்-19 கட்டுப்பாட்டுப் பணிகளில் இருந்து விலகுவதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-8)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். திரு. பஸ்தியாம்பிள்ளை மேரிபோல் தங்கராஜா



எமது வித்தியாலய ஆசிரியை திருமதி சுபாசினி ஹரிச்சந்திரா அவர்களின் அன்பு மாமனார் திரு. பஸ்தியாம்பிள்ளை மேரிபோல் தங்கராஜா அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

(C-9906)

# நகைகளை அணிந்து செல்வதைத் தவிருங்கள்

## யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள் தங்க நகைகளை அதிகளவில் அணிந்து செல்வதை தவிர்க்குமாறு யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண குடாநாட்டில் அண்மைய நாட்களில் வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் கொள்ளையிடும் சம்பவம் அதிகளவில் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பான முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நேற்றும் பாரிய கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட ஒருவர்



கைது செய்யப்பட்டுள்ளார்.

மக்களுக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். யாழ்ப்பாண குடாநாட்டில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள் தங்க நகைகளை அதிகளவில் அணியாது செல்வதன் மூலம் திருட்டு செயல்களை கட்டுப்படுத்த முடியும்.

எனினும் பொலிஸாரால் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நாளாந்தம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவே இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். (4-5-33)

# அனைத்து மக்களுக்கும் பாரபட்சமின்றி நீதியும் நியாயமும் கிடைக்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நீதியும், நியாயமும் மக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் பாரபட்சமின்றி கிடைக்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை திறப்பு விழாவின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரச ஊழியர்கள் நூற்றுக்கு நூறு வீதம் மக்களின் விரிப்பணத்தில் வேலை செய்பவர்கள்.

இன்று வறுமையில் வாடுபவர்கள்கூட அவரது வரிப் பணத்தை எமது சம்பளத்துக்காக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டின் அரசியல் அமைப்பினூடான ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைகளிலும் நோயாளர்களுக்கான உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

உரிமைகளைப் பெற்றுக் கொள்ள நோயாளர்களுக்கு இடமளிக்க வேண்டும். இதற்



காக வடமாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் முன்னிற்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-8)

## இலங்கை ஆவணக் காப்பகத்தின் 72 ஆவது நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்பிற்கான இலங்கை ஆவணக்காப்பகத்தின் 72 ஆவது நிகழ்வு இல. 199, கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். (2)

## இணைய வழிக்கற்றலுக்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு யூரியூப் இணையவழி மூலம் கற்பிக்க வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ள பாடசாலைக் கல்வியினை வீடுகளில் இருந்தே கற்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பாடசாலை மாணவர்கள் உரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பதோடு நேர அட்டவணை மற்றும் பாடங்கள் தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலக இணையத்தளங்களைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். (4-5-114)

# 15 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதாகினர்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் 15 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஆட்டோ ஒன்றில் போதைப் பொருளுடன் சாவகச்சேரி நகரப் பகுதி நோக்கி வந்த சமயம் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட மதுவரி உதவி ஆணையாளர் பிரபாத்தின் வழிகாட்டுதலின் கீழ் சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி இந்திக்க நிரோசன் தலைமையிலான குழுவினர் இக்கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று பிற்பகல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். (5-30)

# ஊரடங்கு நடைமுறையால் வருமான இழப்பு; வியாபாரிகளுக்கு கட்டண விலக்களிப்பு

(குப்பிழான்)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டத்தால் வருமான இழப்பை எதிர்நோக்கியுள்ள நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வியாபாரிகளுக்கு இரண்டு மாதக் கட்டண விலக்களிப்புச் சலுகையை வழங்குவதென நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த திங்கட்கிழமை சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் தா. தியாகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் செயலாளர் சு.சுதர்ஜன் கருத்துத் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்றுக் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வந்த காரணத்தால் நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் சபையின் வாடகைக்குப் பெற்ற கடைகள், குத்தகைக்குப் பெற்ற சந்தைகள், குத்தகைக்குப்பெற்ற இறைச்சிக் கடை வியாபாரிகளுக்கு இழப்பீடுகள் ஏற்பட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு வாடகைக்குப் பெற்ற கடைகளுக்கு 45 நாட்கள் கட்டணங்களிலிருந்து விலக்களிக்க வேண்டிய தேவையிருக்கிறது எனத் தெரிவித்தார். அத்துடன் ஒரு மாதத்திற்கான தண்டப் பணத்தையும் விலக்களிக்க வேண்டிய தேவையிருக்கிறது எனவும் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மார்ச் மாதத்தில் பத்து நாட்கள் குறித்த கடைகள் இயங்கியமைக்கான கட்டணத்தை ஏப்ரல்- 10 ஆம் திகதிக்கு முன்னரே அவர்கள் செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் தண்டம் அறவிடுவது வழமை.

எனினும், ஏப்ரல் மாதத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருந்த காரணத்தால் இதற்கான கட்டணத்தை செலுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கவில்லை.

எனவே, அந்த ஒரு மாதத்திற்கான தண்டப் பணத்தையும் விலக்களிக்க வேண்டிய தேவையிருக்கிறது.

திருநெல்வேலிச் சந்தை சுற்றாடலில் பிரதேச செயலாளரின் விசேட அனுமதியின் பேரில் சில கடைகள் இயங்கியுள்ளன. குறிப்பாக ஊரடங்கு வேளையிலும் மொத்தமாக வியாபாரம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, அந்த விபரங்களை நாங்கள் இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாகத் தருமாறு பிரதேச செயலாளரிடம் கோரியிருந்த போதிலும் காதாமதம் காரணமாக எங்கள் கைகளுக்கு கிடைக்கவில்லை. எனினும், அந்தக் கடைகளையும் நாங்கள் எங்கள் கணிப்பீட்டில் உள்வாங்கியுள்ளோம்.

வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு தான் நாங்கள் இது தொடர்பான விலக்கை அளிக்க வேண்டிய தேவையிருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-18)

# முதன்முறையாக பணயக்கைதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த குழு நியமனம்!




(கொழும்பு)

**நாட்டில் முதன்முறையாக விமானங்கள் கடத்தப்படல் மற்றும் பணயக் கைதிகளாக பிடிக்கப்படல் போன்ற சந்தர்ப்பங்களில் சர்வதேச விமானப் போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக ஒன்பது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

இவர்களுக்கான நியமனம் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சில் ஓய்வுபெற்ற பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரட்ன தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, பணயக்கைதிகள் தொடர்பான பேச்சுவார்த்தை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்பது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்குமான நியமனக் கடிதங்களை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன வழங்கி வைத்தார்.

இவ்வாறு பணயக்கைதிகள் தொடர்பான பேச்சுவார்த்தை அதிகாரிகளாக நியமனம் பெற்றவர்கள் அனைவரும் 2006ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்பட்ட பயிற்சி நெறியில் பங்குகொண்டவர்களாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சுகாதார வழிகாட்டல்களுக்கு சட்டமா அதிபர் அனுமதி

(கொழும்பு)

பொதுத்தேர்தலுடன் தொடர்புடையதாக சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜெயவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளரால் பொதுத்தேர்தல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களில் தேர்தல் கூட்டங்கள், தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் அலுவலகங்கள் தொடர்பில் மாத்திரமே சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். (ஜ-4)

## பொதுத் தேர்தல் முடியும் வரை பாடசாலைகளை மூடத் தீர்மானம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நிறைவடையும் வரை பாடசாலைகளை தொடர்ந்தும் மூடிவைத் திருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸிற்கு எதிரான தற்பாதுகாப்பு நடவடிக்கையாக பாடசாலைகளை தேர்தல் முடியும்வரை மீள ஆரம்பிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய சுகாதார அமைச்சு ஓகஸ்ட் ஐந்தாம் திகதி வரை பாடசாலைக்ளை மூடி வைத்திருக்குமாறு கல்வியமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல்கள் நிறைவடைந்திருக்கும், வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் என சுகாதார அமைச்சு கருதுவதாகவும் குறித்த ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஜ-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 53.5 செவ் 11 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சாரதி (தனியார்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10986

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்கி.பா: 20 செவ்4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச நிரந்தர உத்தியோகம்
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/10987

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மகம் கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்: கனடாவில் வேலை செய்கின்றார். நிரந்தர வதிவிட உரிமம் உண்டு.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/10988

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: சூரி,செவ் 2 இல்
தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. பங்குதாரர் கடை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10992

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மகம். கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: மருத்துவ தாதி. (பிரான்ஸ் குடியுரிமை)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8505

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3 கி.பா: செவ் 5 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கணனியில் டிப்ளோமா தனியார் கம்பனியில் வேலை
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகத்தர் அல்லது வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/8506

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 27 - சூரி.செவ் 3,இல்
உயரம்: 4'11"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. கணக்காளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகத்தர்
தொ.இ: G/8511

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2 கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு:.படித்த மணமகன். அரச தனியார் உத்தியோகத்தர்.
தொ.இ: G/8517

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## படகு மூழ்கடிப்பு மீனவர் படுகாயம்



(திருமலை)

திருகோணமலையில் கடந்த 15 ஆம் திகதி ஐந்து மணியளவில் மீன்பிடித்து கரைதிரும்பிய ஜமாலியா பிரதேச மீனவர்களின் படகு மீது திருகோணமலை கரையோர காவல் படகு மோதியதில் ஏற்பட்ட விபத்தில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்ததுடன் படகு பலத்த சேதத்திற்கு உள்ளானது.

மேற்படி விபத்தில் படுகாயமடைந்த ஜமாலியா பிரதேச மீனவர் அப்துல் மஜீத் மௌஜூத் (வயது 40) என்பவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ-4)


**மணமகள் தேவை**

1987.07.20 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் 1 இல் சூரியசெவ் கிரக பாவம் 65 1/2 அரச தொழில் HNDA+B.com உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- 0778221343

(3335)

**இந்து, பௌத்த கலாசார பேரவை**

பதவி வெற்றிடம்

இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைமை காரியாலய செயலாளர்

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது எல்லை 25-40 வயதுக்கு இடையில் அனுபவம் 3 வருடங்கள். கணனியில் தமிழிலும், ஆங்கிலத்திலும் க்டிதங்கள் தயாரிக்கக் கூடியவராகவும் மின்னஞ்சல் மற்றும் கணனி சம்பந்தமான அனைத்து வேலைகளும் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். உங்கள் சுயவிபரக்கோவையை தபால் மற்றும் மின்னஞ்சல் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

இடம்: இந்து பௌத்த கலாசார பேரவை
பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

கல்வித்தகைமை - G.C.E. A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

காரியாலய வரவேற்பாளர்

வயது எல்லை 20-30 இற்கிடையில் A/L சித்தியடைந்திருத்தல். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் சரளமாக உரையாடத் தெரிய வேண்டும். இந்த விண்ணப்பம் பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் உங்கள் சுயவிபரக்கோவையை தபால் மற்றும் மின்னஞ்சல் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

International Legal Association (PVT) Ltd,
No: 25 A/2 & B/2 (2nd Floor),
Belmont Street,
Colombo 12
Mtsintlegalassociation@gmail.com.

(3338)

# கரைச்சி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி இடித்தளிப்பு

## ➢ பழிவாங்கும் நோக்கம் என மக்கள் குற்றச்சாட்டு

## ➢ அனுமதி பெறப்படவில்லை என பிரதேச சபை தெரிவிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள செருக்கன் குடியிருப்பு பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றினால் உப்பள தொழிலாளர்களின் குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி கரைச்சி பிரதேச சபையினரால் இடித்து அகற்றப்பட்டுள்ளது. தவிசாளர் அரசியல் ரீதியாக எங்களை பழிவாங்கும் நோக்குடன் நடந்து கொள்கின்றார் என செருக்கன் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் கரைச்சிப் பிரதேச சபையின் கனரக வாகனங்கள் மூலம் குறித்த நீர்த்தாங்கி மற்றும் அதனோடு இணைந்த மலசல கூடம் என்பன இடித்து வீழ்த்தப்பட்டுள்ளன.



அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டடம் எனத் தெரிவித்து கரைச்சிப் பிரதேச சபையினரால் இடிக்கப்பட்டுள்ளது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களுடைய கிராமம் உவர் பிரதேசமாகவும் இங்கு வருடத்திற்கு 365 நாட்களுக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் கரைச்சிப்பிரதேச சபையினரால் சீராக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை

இந்த நிலையில் கிளிநொச்சி நகரிலிருந்து சுமார் 12 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற உப்பளம் ஒன்றில் செருக்கன் குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் பலர் பணியாற்றி வருகின்றனர்.

அவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள், அதில் பலர் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

எனவே இங்கு பணி புரியும் இவர்களின் குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தனியாரால் அமைக்கப்பட்ட நீர்த் தாங்கி, மலசலகூடம் என்பன நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேச சபையால் இடித்து அகற்றப்பட்டுள்ளது.

நாங்கள் கும்பிட்டு மன்றாடிக் கேட்டும் அவர்கள் செவிசாய்க்கவில்லை. நகரத்தில் எத்தனையோ சட்டவிரோத கட்டடங்கள் காணப்படுகின்றன.

அவற்றையெல்லாம் விட்டு விட்டு பல கிலோ மீற்றர்கள் தொலைவில் காட்டுக்குள் அமைந்துள்ள நீர்த்தாங்கியை உடைத்து அகற்றுவது என்பது மிகவும் மோசமான செயல். இது மிகவும் வேதனையளிக்கிறது எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் கா.சண்முகதாசனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த நீர்த்தாங்கி அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டது.

மூன்று தடவைகள் கடிதம் மூலம் அறிவித்தும் அவர்கள் உரிய அனுமதி பெறவில்லை. எனவேதான் சட்ட ரீதியாக உடைத்துள்ளோம் எனத் தெரிவித்தார். (5-350)

# காட்டு யானைகளால் பயிர்கள் சேதம்



(தருமபுரம்)

கிளிநொச்சி கல்மடு குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொண்டு வரும் விவசாயிகள் ஒவ்வொரு வருடமும் பயிர்ச்செய்கை அறுவடை காலத்தில் காட்டு யானைகள் தினமும் வந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின்சார வேலி அல்லது ஏதேனுமோர் நிரந்தரத் தீர்வினை பெற்றுத் தரவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (4-5-316)

# வாக்களிப்பை படம் எடுத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## முல்லை.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தபால் மூலம் வாக்கு போடுவதை படம் எடுத்து அதனை வேறு ஒரு நபர் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்குப் பதிவுகள்தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரச



உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்குப் பதிவைப் படம் எடுத்து வேறு ஒரு நபர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக குறித்த புகைப்படத்தை பதிவேற்றியவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தேர்தலின் போது வாக்காளர்கள் எக்காரணம் கொண்டும் வாக்களிப்பை படம் எடுப்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இது தேர்தல் விதி முறையினை அப்பட்டமாக மீறும் செயற்பாடு என்றும் வாக்காளர்களின் இரகசியத் தன்மை பேணப்பட வேண்டும்.

இதனை வெளிப்படுத்துவது வாக்களிப்பின் நோக்கத்தினை இல்லாமல் செய்யும் நோக்கமாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-5-281)

# வர்த்தக சங்க அறிவிப்பு

(காரணவாய்)

ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை நெல்லியடி வர்த்தக சங்க நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடுமுறைக்கு பதிலீடாக நாளை ஞாயிற்றுக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களையும் திறப்பதற்கு நெல்லியடி வர்த்தக சங்கம் அனுமதி வழங்கியுள்ளது என செயலாளர் சுரேஞ்சன் அறிவித்துள்ளார். (4-5-8-60)

# வவுனியாவில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நேற்று முன்தினம் மாலை வவுனியா நகரப்பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாணத்தில் கொரோனாவின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புக்கள் காணப்படுவதால் வவுனியா சுகாதாரத்திணைக்களத்தின் அனுசரணையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் வவுனியா நகரப்பகுதிகளில் வாகன ஒலிபெருக்கி மூலம் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுவது, முகக்கவசம் அணிவது, கைகளை நன்றாக கழுவுவது, வீதிகளில் எச்சில் துப்புவது போன்றவற்றை கட்டுப்படுத்தவும் செயற்படுத்தவும் பொது மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (2-5-299)

# வவுனியாவில் தேர்தல் பிரசுரங்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியாவின் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் விளம்பரங்கள், பிரசுரங்களுக்கு எதிராக பொலிஸார் நேற்று முதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா பண்டாரிக்குளம் பாடசாலைக்கு முன்பாக ஒட்டப்பட்டிருந்த தேர்தல் பரப்புரை விளம்பரங்களை கிழித்து வருவதுடன் மதில்கள், மின்கம்பங்களில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு ஒயில் பூசும் நடவடிக்கையினையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நகரின் பல்வேறு பகுதிகளில் அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்களின் தேர்தல் பரப்புரை பிரசுரங்கள், விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அவ்வாறு ஒட்டப்பட்டுள்ள பிரசுரங்கள், விளம்பரங்களுக்கு எதிராக பொலிஸார் நேற்று முதல் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-299)

# சூழல்நேய பிரசாரத்திற்கு ஜனாதிபதிக்கு விருது



(கொழும்பு)

உலக தேர்தல் வரலாற்றில் மக்கள் பங்களிப்புடன் நடைபெற்ற முதலாவது "காபன் குறைந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக" வழங்கப்படுகின்ற "சூழல்நேய பிரசாரத்திற்கான சான்றிதழ்" ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

"சுபீட்சத்தின் நோக்கு" பிரகடனத்தில் சுற்றாடல் கொள்கை உருவாக்க குழுவின் பிரதிநிதிகள் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு இச்சான்றிதழை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரம் சுற்றாடல் பாதிப்பு மற்றும் பசுமை வாயு வெளியேற்றம் முற்றாக இல்லாத பிரச்சாரம் என்பதை பசுமை வாயு முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரமுள்ள **Sustainable Future Group** என்ற சுற்றாடல் அமைப்பு உறுதி செய்துள்ளது. இக்குழு பசுமை வாயு வெளியேற்றத்துறையில் சர்வதேச தரத்தைக் கொண்ட இலங்கை தராதர அங்கீகார சபையின் அனுமதியை பெற்றதாகும்.

சம்பிரதாய தேர்தல் முறைகளிலிருந்து விலகி, சுற்றாடலைப் பாதிக்காத ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை திட்டமிட்டமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணம் மற்றும் நோக்கமாகும். நாடு முழுவதும் 150க்கும் மேற்பட்ட கூட்டங்களை பொலித்தீன், சுவரொட்டி, பதாதைகள் எதுவுமில்லாமல் நடத்துவதற்கு ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்திருந்தார்.

மக்கள் சந்திப்புகளுக்கு வருகை தரும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களினால் சுற்றாடலுக்கு வெளியிடப்படும் காபன் அளவு சர்வதேச முறைமையில் கணக்கிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்படும் காபன் அளவை உள்வாங்குவதற்காக 21 ஆயிரம் மரங்கள் நடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் "நாட்டில் உருவாக்கப்படும் சுதந்திரத்தின் மூச்சு" மர நடுகைத் திட்டம் அனைத்து மக்கள் கூட்டங்களிற்கு இணையாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 26 ஆயிரம் மரக் கன்றுகள் நடப்பட்டு இது வரை காலமும் பராமரித்து வருவதனால் காபன் தாக்கம் முழுமையாக தடுக்கப்பட்டுள்ளது என்பதை "தேசிய தூய்மை உற்பத்தி மத்திய நிலையம்" கணக்கிட்டுள்ளது. குறித்த கால வரையறையில் சுற்றாடல் பாதிப்பு மற்றும் காபன் வெளியேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றாடல் பாதிப்பு முற்றாக இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளமையை உறுதி செய்துள்ளதாக இலங்கை தராதர அங்கீகார சபை அறிவித்துள்ளது.

"பசுமை சுற்றாடல் கொள்கை என்பது சுற்றாடல் பாதுகாப்பு மட்டுமன்றி சமநிலைப்படுத்தப்பட்ட சமூக, பொருளாதார பழக்கங்களை நடைமுறைப்படுத்தல்" ஆகுமென்று ஜனாதிபதி அவர்களின் "சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது".

"சுபீட்சத்தின் நோக்கு" பிரகடனத்தில் சுற்றாடல் கொள்கை உருவாக்கக் குழுவை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பேராசிரியர் சரத் கொட்டகம, கலாநிதி சம்பத் வாஹல, தர்ஷனி லகந்தபுர, ரோஷினி ராஜபக்ஷ, சமிந்த மகநாயக்க, அனுஷ்க குமாரசிங்க, சமந்த குணசேகர மற்றும் அர்ஜுன பெரேரா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஜ-2)

## 30 பொலிஸார் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

ஹோமாகம-நுகேகொட நான்காம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் பிரிவில் பெண் சார்ஜன்ட் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே பொலிஸார் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒன்பது பொலிஸ் அதிகாரிகளும், நான்கு சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் ஹபராதுவ தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், 13 பொலிஸாரும் ஐந்து சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் அத்திட்டிய தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

## கைதிகளை பார்வையிட சென்ற எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை

(கொழும்பு)

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் கைதிகளை பார்வையிடச் சென்ற எவருக்கும் கொவிட்-19 தொற்றுறுதியாகவில்லை என பி.சி.ஆர்.பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அந்த மையத்தில் கைதிகளை பார்க்கச் சென்ற அனைவருக்கும் இதுவரையில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## வாக்காளர் அட்டை விநியோகம்; தபால் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பு!

(கொழும்பு)

வாக்காளர்அட்டைகள் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் கையொப்பமிடுவதற்காக பிரத்தியேக பேனைகளை பயன்படுத்துமாறு தபால் திணைக்களம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை சுய தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளவர்களின் வீடுகளுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார ஆலோசனைகளுக்கமைய இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சுகாதார தரப்பினரின் ஆலோசனைகளுக்கமைய குறித்த பகுதிகளில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாளை மற்றும் 26 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கறுப்புப்பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் அர்ஜுன் மகேந்திரன் உட்பட 8 பேருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக கறுப்புப் பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் சி.ஐ.டி. விரிவாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி ஹ்றியாகமவுடன் மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹறிப்பிரியா ஜயசுந்தர கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவுக்கு அறிவித்த நிலையில், விசாரணைகளின் முன்னேற்றத்தை எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பிலான விவகாரத்தில் கறுப்புப் பண சுத்திகரிப்பு தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளுக்கு அமைவான வழக்கு விசாரணைக்கு வந்தது.

இதன்போது சி.ஐ.டியின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பியசேன அம்பாவல உள்ளிட்ட குழுவினர், சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி ஹ்றியாகம, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹறிப்பிரியா ஜயசுந்தரவுடன் மன்றில் ஆஜராகினர்.

இவ்வழக்கில் சந்தேக நபர்களான தற்போது பிணையில் உள்ள, பேர்பர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவன தலைவர் அர்ஜுன் ஜோசப் அலோசியஸ், அந் நிறுவனத்தின் பெயரளவிலான பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன, பணிப்பாளர்களான ஜெப்ரி ஜோசப் அலோசியஸ், புஷ்பமித்ர குனரத்ன, சித்த ரஞ்சன் ஹுலுகல்ல, முதுராஜா சுரேந்ரன், மற்றும் பீ.சமரசிங்க ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

எனினும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அஜான் புஞ்சிஹேவா ஆகியோர் மன்றில் ஆஜராகவில்லை. அவர்கள் வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ளனர்.

இதன்போது இலங்கை மத்திய வங்கியின் முதல்நிலை வணிகராக செயற்பட்ட பேர்பர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தினூடாக 2015 ஆம் ஆண்டில் மத்திய வங்கி முறிகளை கொள்வனவு செய்வதற்காக ஸ்டெல்லா அயிராங்கனி திசாநாயக்க மற்றும் சுனில் பிரேமரத்ன ஆகியோரினால் முதலீடு செய்யப்பட்ட நிதி முதிர்ச்சியடைந்திருந்தால் அதனை மீள செலுத்த உத்தரவிடுமாறு முதலீட்டாளர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி நலின் டி சில்வா மன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த நிதியை திருப்பிச் செலுத்துமாறு மத்திய வங்கி ஆளுநருக்கு உத்தரவிடுவது தொடர்பில் முறைப்பாட்டாளர் தரப்புக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹறிப்பிரியா ஜயசுந்தர மன்றுக்கு அறிவித்தார்.

இந் நிலையில் இது குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஜ-4)

## கொரோனா வைரஸ் தொடர்பில் மக்கள் தேவையற்ற அச்சம் வேண்டாம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பில் பொது மக்கள் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் தொடர்பில் அதன் தலைவர்கள் பொறுப்புடையவராக இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-8)

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்



08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

மட்டக்களப்பில் அமிர்தலிங்கம் தோல்வியடைந்தார். TELO கருணாகரனுக்கு அதிகப்படியான வாக்குகள். அவரோடு பிரின்ஸ் காசிநாதரும் சாம் தம்பிமுத்துவும் தெரிவானார்கள். EROS இற்கு ஒரு ஆசனம் கிடைத்தது. அமிர்தலிங்கம் தேசியப் பட்டியலூடாக பாராளுமன்றம் புகுந்தார்.

EROS இற்கு திருகோணமலையில் 2, வன்னியில் 1, தேசியப் பட்டியலில் 1 என்று ஆக மொத்தம் 13 ஆசனங்கள் கிடைத்தன. அமிர்தலிங்கத்தின் கொலைக்குப் பின்மாவை சேனாதிராசா எம்.பியாகவும் சாம் தம்பிமுத்துவின் கொலைக்குப் பின் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு எம்.பியாகவும் பதவியேற்றனர்.

தேர்தலின் பின்னர் மே 4, 1989 ஆம் ஆண்டு பிரேமதாஸ அரசிற்கும் விடுதலை புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் ஆரம்பமாகி ஜூன் 10, 1990 இல் முடிவிற்கு வந்தது. யுத்தம் ஆரம்பமாகி 15 ஆவது நாள் 13 EROS நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். சில வாரங்களுக்குப் பின்னர் ஈரோஸ் இயக்கம் பிளவுற்று வே. பாலகுமார் தலைமையிலான அணி விடுதலை புலிகளுடன் இணைந்து கொண்டது.

1989 பொதுத் தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிட்டு, யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவான மூன்று ஈ.பி.ஆர்.எல்.எவ் எம்.பிகளில் ஒருவரான கணேஷ் சங்கரி யோகசங்கரி 1990 ஜூன் 19 இல் படுகொலை செய்யப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஈ.என்.டி.எல்.எவ் வேட்பாளர் ஒருவர் 1990 ஜூலை மாதத்தில் நியமனம் பெற்றார். அந்த பாராளுமன்ற உறுப்பினர் 1994 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் உடல்நலக் குறைவு காரணமாக இராஜினாமா செய்தார். அந்த வெற்றிடத்திற்கு ஸ்ரீகாந்தா நியமனம் பெற்று 1994 மே 5 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல்- 1994

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1994 ஒகஸ்ட் 16 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்திற்காக 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 1989 தேர்தலின் போது பதினொரு பாராளுமன்ற ஆசனங்கள் இருந்தன. 1994 தேர்தலின் போது அந்த எண்ணிக்கை 10 ஆகக் குறைக்கப்பட்டிருந்தது. வன்னித் தேர்தல் மாவட்டத்திற்கு 6 ஆசனங்களாகும்.

### வடமாகாணத்தில் தேர்தலை நடத்துதல்- 1994

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட வடமாகாணத்தின் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகிய அனைவரும் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்புக் கருதி பெரும்பாலும் அம்மாகாணத்திற்கு வெளியே உள்ள வேறு பிரதேசங்களில் தற்காலிக வதிவைக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமளவுக்கு சுதந்திர சூழ்நிலையொன்று அப்பிரதேசங்களில் காணப்படவில்லை.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களுக்குமுரிய வாக்கெடுப்பு பிரிவுகளிலுள்ள 617 வாக்கெடுப்பு மாவட்டங்களில் 635 வாக்களிப்பு நிலையங்களை நிறுவ வேண்டியேற்பட்டது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் 466 வாக்களிப்பு நிலையங்களில் 82 வாக்களிப்பு நிலையங்களில் மாத்திரமே வாக்களிப்பு நடத்த முடிந்தது. அவற்றையும் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை மற்றும் காங்கேசன்துறை ஆகிய 3 வாக்கெடுப்புப் பிரிவுகளோடு மாத்திரம் வரையறுக்க வேண்டியேற்பட்டது. அதிலும் ஊர்காவற்றுறை வாக்கெடுப்பு பிரிவில் மாத்திரமே அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்பினை நடத்த முடிந்தது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் ஏனைய 8 (சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கோப்பாய், மானிப்பாய், நல்லூர், பருத்தித்துறை, உடுப்பிட்டி) வாக்கெடுப்பு பிரிவுகளிலும் 384 வாக்களிப்பு நிலையங்களை நிறுவ வேண்டியிருந்தபோதும் அவற்றை நிறுவி வாக்களிப்பை நடத்த முடியாமற் போய்விட்டது.

வன்னித்தேர்தல் மாவட்டத்திற் குரித்தான மன்னார் வாக்கெடுப்புப் பிரிவின் 54 வாக்களிப்பு நிலையங்களில் 21 வாக்களிப்பு நிலையங்களிலும் வவுனியா வாக்கெடுப்புப் பிரிவின் 65 வாக்களிப்பு நிலையங்களில் 46 வாக்களிப்பு நிலையங்களிலும் முல்லைத்தீவு வாக்கெடுப்புப் பிரிவின் 50 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு வாக்களிப்பு நிலையத்திலும் மாத்திரமே வாக்களிப்பை நடத்த முடிந்தது. இத்தேர்தல் மாவட்டத்தின் 101 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பினை நடத்த முடியாமற் போய்விட்டது.

அதற்கமைய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் 82 வாக்களிப்பு நிலையங்கள் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் 68 வாக்களிப்பு நிலையங்கள் என்பவற்றில் மாத்திரமே தேர்தல் நடத்த முடிந்தது. வடமாகாணத்தில் தேர்தலை நடத்த முடியாமல் போன வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 485 ஆகும்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 48அ பிரிவின் கீழ் 1994.08.15 ஆம் திகதியிடப்பட்ட 832/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினூடாக தேர்தல்கள் ஆணையாளரினால் வடமாகாணத்தில் வாக்களிப்பு நடத்தப்படாத வாக்களிப்பு நிலையங்களின் தேர்தல் வறிதாக்கப்பட்டது.

### யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் 1994

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஈழப் புரட்சிகர மாணவர் இயக்கம் (EROS), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஆகியவை சேர்ந்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF) என்ற கட்சியில் சுயேட்சைக் குழு - 1 இல் போட்டியிட்டன. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தனியாகப் போட்டியிட்டது. இவற்றுடன் சுயேட்சைக்குழு-2 ஆன ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் போட்டியிட்டன. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட 1994 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-17 மற்றும் 18 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 17

இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1994

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

| தேர்தல் தொகுதி | EPDP | SLMC | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் |
|---|---|---|---|
| சாவகச்சேரி | 13 | 62 | 51,717 |
| யாழ்ப்பாணம் | 76 | 1,914 | 50,045 |
| காங்கேசன்துறை | 93 | 4 | 60,417 |
| ஊர்காவற்றுறை | 9,944 | 56 | 49,504 |
| கிளிநொச்சி | 2 | 56 | 55,995 |
| கோப்பாய் | 40 | 0 | 56,496 |
| மானிப்பாய் | 4 | 0 | 58,382 |
| நல்லூர் | 8 | 0 | 62,372 |
| பருத்தித்துறை | 3 | 0 | 40,336 |
| உடுப்பிட்டி | 5 | 1 | 52,153 |
| வட்டுக்கோட்டை | 556 | 5 | 58,949 |
| தபால் வாக்குகள் | 0 | 0 | 0 |
| மொத்த வாக்குகள் | 10,744 | 2,098 | 596,366 |
| சதவீதம் | 79.71% | 15.56% | |
| ஆசனங்கள் | 9 | 1 | |

### வடமாகாண மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு -1994

1994 ஆம் அண்டு நடைபெற்ற தேர்தலைப் பற்றி டக்ளஸ் தேவானந்தா 20, மே, 2000 அன்று நாடாளுமன்றில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

"1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலைப் புலிகள் பகிஷ்கரித்தது மாத்திரமல்ல, அந்தத் தேர்தலில் யாராவது போட்டி போட்டால் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொல்லப்படுவார்கள் எனவும் விடுதலைப் புலிகள் அப்போது அறிவித்திருந்தார்கள்.

ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் "ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வு" என்ற அரசியல் இலக்கை நோக்கி நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தபடியால் அந்தத் தேர்தலில் பங்கெடுப்பதென முடிவெடுத்தோம்.

அந்த வகையில் எங்களோடு வேறு சில அரசியல் கட்சிகளும் பங்கெடுத்திருந்தன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தேர்தலைப் பொறுத்த வரையில் தீவுப் பகுதி மாத்திரந்தான் அன்று அரச கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்தபடியால் இங்கு மாத்திரம் தான் அந்தத் தேர்தலை நடத்தக் கூடியதாக இருந்தது. அந்த வகையில் எங்களோடு வேறு சில அரசியல் கட்சிகளும் பங்கெடுத்தன.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான தேர்தலைப் பொறுத்தவரையில் தீவுப் பகுதி மாத்திரம் தான் அன்று அரச கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்தபடியால் இங்கு மாத்திரம்தான் அங்கு தேர்தலை நடத்தக்கூடியதாய் இருந்தது. அந்த வகையில் அங்கிருந்த மக்களில் பத்தாயிரம் பேர் அளவில் தான் அந்த வாக்களிப்பில் கலந்து கொண்டார்கள்.

அவர் சொன்ன ஐந்து வாக்குள் பத்து வாக்குகள் என்பது இடம்பெயர்ந்தவர்கள் அளித்த வாக்குகளாகும். அதாவது அங்கிருந்து இடம்பெயர்ந்து வடக்கு - கிழக்கிற்கு வெளியில் - யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியில் கொழும்பு மாநகரத்தில் இருந்தவர்கள்தான் அந்த வாக்குகளை அளித்தார்கள். (தொடரும்...)

# பின்னடைந்து பலவீனமான நிலையில் தமிழ் மக்கள்



## சித்தார்த்தன் கவலை

(நெளுக்குளம்)

தமிழ் மக்கள் பின்னடை வானதும் பலவீனமானதுமான நிலையில் உள்ளோம் என புளொட் அமைப்பின் தலைவ ரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப் பின் யாழ்.மாவட்ட வேட்பாளரு மான த.சித்தார்த்தன் கவலை வெளியிட்டுள்ளார்.

புளொட் அமைப்பின் 31 ஆவது வீரமக்கள் தினம் நேற்று முன்தினம் வவுனியா கோவில் குளத்தில் உள்ள உமாமகேஸ் வரன் நினைவுத் தூபி வளா கத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமது இன்னுயிரையீன்ற தலைவர்களையும் பொதுமக் களையும் தோழர்களையும் நினைவுபடுத்துகின்றோம் என் றால் அவர்களது கனவுகள் நனவாகும் வரை அவர்களு டைய பாதையில் சென்று அக் கனவுகளை நிறைவேற்றவேண் டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த நினைவேந்தல்கள் எல் லாம் நடந்து கொண்டு இருக்கி ன்றன.

இன்று தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலே மிகவும் பலவீனமானதும் பின்னடை வானதுமான நிலையில் இரு ந்து கொண்டு இருக்கிறோம். முதலில் சாத்வீக போராட்டமாக பின்னர் ஆயுதப் போராட்டமாகப் பல குழுக்கள் ஆயுதப்போராட் டத்தை முன்னெடுத்துவரும் நிலையில் ஆயுத ரீதியாகவும் ஒரு பலம்பொருந்திய அமைப் பாக இருந்தது.

பின்னர் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு மீண்டும் சாத்வீக ரீதியான போராட்டம், ஜனநாயக ரீதியான போராட்ட ங்கள் பேச்சுவார்த்தைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. இவை கள் மூலம் தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக் கும் தமிழ் மக்களுடைய தேசி யப் பிரச்சினைக்கும் ஒரு நியா யமான தீர்வைப் பெறமுடியுமா? என்ற ஏக்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரிய ஆதரவை அரசுக்கு வழ ங்கியது.

யுத்தம் முடிவடைந்து 2010 தொடக்கம் இன்று வரை பத்து வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை மூலம் ஒரு நியாயமான தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளிலே இருக்கின்றது. 2010 தொடக்கம் 2015 வரை மகிந்த ராஜபக்ஷ வின் அரசு இருந்த காலப்பகு தியிலே பெரிதாக எதையும் செய்து விட முடியாத நிலையிரு ந்தது. ஏனென்றால் எந்தவித மான நியாயமான தீர்வுக்குச் செல்வதற்கு அப்போதும் இருக் கவில்லை தற்போதும் இருக்க வில்லை.

2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலைமை யில் புதிய ஆட்சி உருவானது. தமிழ் மக்களின் பெருவாரி யான வாக்குகளைப் பெற்று மைத்திரிபால சிறிசேன ஜனா திபதியாக வந்தார்.

இதற்காக நன்றிக்கடன் செலு த்துவதாகவும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டுமல்லாது அரசு கூட புதிய அரசியல் அமைப்பு பேரவை நடவடிக்கை குழு. ஆறு உபகுழுக்கள் போன்ற பல விடயங்கள் ஆரம்பிக்கப்ப ட்டு புதிய அரசியல் அமைப்பை உருவாக்குகின்ற அந்த பாதை யிலே செல்ல ஆரம்பித்தது. அதன் காரணமாக அரசிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கியதோடு தீர்வு விடயத்தில் நாங்களும் அக்கறையாகச் செயற்பட்டோம்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சேர் ந்து அரசை அமைத்திருந்த காரணத்தினால் ஒரு தீர்வை நோக்கி அவர்கள் செல்வார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. கடந்த காலங்களிலே இனப்பிரச் சினைக்கான தீர்வை இரு கட்சி களும் மாறி மாறி குழப்பிக் கொண்டு இருந்த நிலையில் இரு கட்சிகளும் இணைந்தி ருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்லாது சர் வதேச ரீதியாகவும் இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு தீர்வு விடயத்திலே தவறு செய்து விட்டதாக விமர்சனங் கள் வெளியிலே வைக்கப்படுகி ன்றன. இந்த விமர்சனங்கள் அரசியல் ரீதியானதே தவிர எந்த ரீதியாகவும் யதார்த்த மானதாகவோ அல்லது நியா யமானதாகவோ இல்லை.

அரசாங்கத்திற்கு வரவு-செலவுத் திட்டத்திலே வாக்களி த்தது தொடர்பாக ஒரு விமர்ச னங்கள் எழுகின்றன. வெறும னவே வாக்களித்திருந்தால் விமர்சனம் சரியாக இருக்கும். ரணில் விக்கிரமசிங்கவிற்கு மூன்றில் இரண்டு பெரும்பா ன்மை கிடைக்காவிட்டால் அர சியல் அமைப்பில் மாற்றத்தை செய்யுங்கள் என்று சர்வதேசம் அழுத்தங்களை வழங்குகின்ற போது எம்மிடம் பெரும்பான்மை இல்லை என அவர் இலகுவில் பதில் சொல்லிவிடுவார்.

எனினும் கூட்டமைப்பின் ஆதரவினால் அந்த பெரும்பா ன்மை கிடைத்தால் அதனைத் தீர்க்கவேண்டிய தேவையும் உருவாகும் என்ற நோக்கத்தி ற்காகவே அந்த ஆதரவினை வழங்கினோமே தவிர எமக்கு வேறு எந்த இலாபமும் இல்லை எனஅவர்தெரிவித்தார்.(ஜ-4-299)

## நடமாடும் வாக்குப்பெட்டிகள்?



(கொழும்பு)

தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டுள்ளவர்கள் வாக் களிக்க, வீடு வீடாக வாக்குப் பெட்டிகளைக்கொண்டு செல் வது குறித்து ஆராயவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன் றில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களை பொதுவான வாக்களிப்பு நிலை யத்திற்கு அழைத்து வர முடி யாது. அவர்களுக்காக பிறி தொரு வாக்களிப்பு நிலை த்தை ஸ்தாபிக்க எண்ணியுள் ளோம்.

ராஜாங்கனையில் இரு பிரத் தியேக இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்வாறு இல்லாவிடின் வாக்குப் பெட் டியை எடுத்துக் கொண்டு வீடு வீடாக செல்வோம்.

இதற்கு முன்னர் தனிமைப் படுத்தப்பட்டவர்களை வாக்க ளிக்க தேர்தல் நடைபெறும் தினத்தன்று மாலை 4 மணி க்கும் 5 மணிக்கும் இடையி லான காலப்பகுதியில் சாதா ரண வாக்களிப்பு நிலையங்க ளுக்கு அழைத்துவர தீர்மானிக் கப்பட்டது. ஆனால் தனிமைப் படுத்தல் சட்டத்திற்கமைய தனி மைப்படுத்தப்பட்டவர்களை அவ்வாறு வெளியில் அழை த்துவர முடியாது எனவும் கூறி னார். இதனடிப்படையிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள் ளப்படவுள்ளது. (ஜ-4)

## மீள் திருத்த விண்ணப்பங்களுக்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீள் திருத்த விண் ணப்பங்களை விண்ணப்பிக் கும் கால எல்லை நீடிக்கப்பட்டு ள்ளது.

அதன்படி குறித்த விண்ணப் பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடி யும் எனப் பரீட்சைகள் திணைக் களம் அறிவித்துள்ளது. (ஜ-8)

## ஜனநாயக அமைப்பை தெரிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம்

### இரா.சங்கையா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலாவது கடந்த தேர்த ல்களில் தமிழ் மக்கள் செய்த தவறை மீண்டும் செய்யாது கற்றுக்கொண்ட பாடங்களை அனுபவமாகக் கொண்டு ஒரு ஜனநாயக அமைப்பின் உறுப் பினர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்து பாராளும ன்றம் அனுப்பவேண்டியது இன் றைய காலத்தின் கட்டாயமாகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் இரா. சங்கையா கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை ஆனைக்கோ ட்டை பொதுமண்டபத்தில் நட ந்த தேர்தல் பரப்புரைக்கான கலந்துரையாடலில் வேண்டு கோள் விடுத்தார்.

யுத்தம் முடிந்தபின் நடை பெற்ற இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் மாறிமாறி வந்த அரசுகளிடம் நடந்து முடிந்த யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளையும் அடிப்படை மனித உரிமை மீறல்களையும் தட்டிக்கேட்பதற்கு தமிழ் மக்கள் ஒரு ஜனநாயகக் கட்சியை அனு ப்பத் தவறிவிட்டார்கள்.

அதன் விளைவால் இன்று வரை வருடா வருடமும் ஐ.நா.



சபைக்கு இங்குள்ள தலைவர் கள் போய் வருவதை தவிர வேறு எந்த தீர்வையும் பெற்றுத் தர முடியவில்லை.

தட்டிக்கேட்கும் தகுதியுள்ள வர்கள் அடிப்படை மனித உரிமை மீறல்களிலும் ஜனநாயகத்தி ற்கு விரோதமான செயற்பாடு களிலும் ஈடுபடாதவர்களாக இருக்க வேண்டும்.

தேர்தலுக்கான ஜனநாயகத் தையே மீறி 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றம் சென்றவர்கள் அரசின் உடைய ஜனநாயகத் திற்கு விரோதமான செயற்பாடு களையும் அடிப்படை மனித உரிமை மீறல்களையும் பாரா ளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தட்டிக்கேட்கும் தகுதியை இழந்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டுத் தேர் தல் எவ்வாறு நடந்தது என் பதை தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் தெள்ளத்தெளி வாக எடுத்துக் கூறியுள்ளார்.

அன்று தெரிவு செய்யப்பட்ட 22 பாராளுமன்ற உறுப்பினர் களும் இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட மூன்று கட்சிகளாக பிரிந்து தமிழ் மக்க ளின் உரிமை பற்றிப் பேசுகின் றார்கள்.

இந்த மூன்று கட்சிகளுக்கு ள்ளும் ஜனநாயகத்திற்கு எதி ரான, அடிப்படை மனித உரி மைகளை மீறிய செயற்பாடுக ளைச் செய்த அல்லது அதற்கு உடந்தையாகச் செயற்பட்டவர் களே அதிகமாக உள்ளனர்.

இவர்கள் எவ்வாறு அரசா ங்கத்தை தட்டிக்கேட்க முடியும்? தேவை ஏற்பட்டால் அரசாங்க த்தில் உள்ளவர்களும் இவர்க ளும் தாங்கள் செய்த செயற்பா டுகளை ஒப்பிட்டு விவாதித்து கலந்துரையாடிக்கொள்ளலாம்.

எனவே எதிர்காலத்தில் எந்த அரசாங்கம் அமைந்தா லும் நேருக்கு நேர் நின்று அரசியல் பேரம் பேசும் தகுதி படைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இத்தேர்தலிலா வது ஒரு வாய்ப்பளித்து எமக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

அகிம்சை வாதிகளால் மட் டுமே ஜனநாயகத்துக்கு எதி ரான செயற்பாடுகளை கண்டிக் கவும் தட்டிக்கேட்கவும் சர்வதே சம் வரை எடுத்துச் சென்று நீதி கேட்கவும் முடியும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பாரதம்

# கொரோனாத் தொற்றில் இந்தியா மூ

# 10 இலட்சத்தைக் கடந்தது தொற்று

(சென்னை)

**இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளது. உயிரிழப்புகள் 25 ஆயிரத்தை தாண்டியுள்ளது.அமெரிக்கா மற்றும் பிரேசிலுக்கு அடுத்தபடியாக கொரோனாவால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.**



இந்நிலையில், இந்தியாவில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,003,832 ஆகவும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25,602 ஆகவும் பதிவாகியுள்ளது.

இந்திய மத்திய சுகாதார அமைச்சகத்தின் தரவுகளின் படி, 331,146 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது நாட்டின் மொத்த தொற்று நோயாளர்களில் மூன்றில் ஒரு பங்காகும்.

நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு புதுப்பிக்கப்பட்ட அமைச்சின் தகவல்களின், கொரோனா தொற்று 32,695 பேருக்கு உறுதி செய்யப்பட்டிருந்தமையால் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 968,876 ஆக உயர்வடைந்தது. அதேசமயம், கொரோனாத் தொற்றினால் 606 பேர் உயிரிழந்தமையினால் மொத்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 24,915 ஆக உயர்வடைந்தது.

தொடர்ந்து ஐந்தாவது நாளாக கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளன.

மகாராஷ்டிராவில் நேற்று முன்தினம் அதிகபட்சமாக 8,641 புதிய கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளமையால், மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 284, 281 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, 266 புதிய உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், தொற்றுநோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11,194 ஐ எட்டியுள்ளது. தமிழகத்தின் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 156,369 ஆக உள்ளது, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,236 ஆக உள்ளது.(2)

## ஜம்மு- காஷ்மீரில் துப்பாக்கிச்சூடு பயங்கரவாதிகள் மூவர் உயிரிழப்பு



(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீர்- குல்காம் பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் மூன்று பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.


குல்காம் மாவட்டம்- நாகநாத் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கமைய நேற்று வெள்ளிக்கிழமை காலை பாதுகாப்பு படையினர் அப்பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் படையினரை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிச் சண்டையில் ஜெய்ஷ் ,முகமது அமைப்பைச்சேர்ந்த 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (2)

## இமயம் முதல் தென் சீனாவுக்கு எதிராக ந துணை நிற்போம்



(வோஷிங்டன்)

சீனாவின் ஆதிக்கம் உள்ள இமயம் முதல் தென்சீனக் கடல் வரை நட்பு நாடுகளுக்கு துணை நிற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சீனாவும், அமெரிக்காவும் கடந்த சில மாதங்களாக பல்வேறு பிரச்சினைகளில் மோதி வருகின்றன. அண்மையில் கொரோனா

## கொவிட்-19 ஆராய்ச்சி தகவல்களை திருட ரஷ்யா முயற்சி- பல நாடுகள் குற்றச்சாட்டு



(மொஸ்கோ)

பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள அதிகாரிகளின் கூற்றுப்படி, கடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது ஜனநாயக வலையமைப்புகளை உடைப்பதில் பங்கு வகித்த, ஒரு ரஷ்ய ஹக்கிங் குழு இப்போது கொரோனா வைரஸ் ஆராய்ச்சி தொடர்பான தகவல்களை திருட முயற்சிக்கிறது.

மூன்று நாடுகளால் வெளியிடப்பட்ட ஒரு கூட்டு இணைய பாதுகாப்பு ஆலோசனையில், 'கோசிபியர்' என்று அழைக்கப்படக்கூடிய 'ஏபிடி29' ஹேக்கிங் குழு, ரஷ்ய உளவுத்துறையின் ஒரு அங்கமாக இருந்து கொண்டு இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் கனடாவில் உள்ள கொவிட்-19 தடுப்பூசி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைப்புகளை குறிவைத்துள்ள ரஷ்ய ஹேக்கிங் குழு, கொவிட்-19 தடுப்பூசிகளின் வளர்ச்சி மற்றும் சோதனை தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவுசார் சொத்துக்களை திருடும் நோக்கத்துடன் செயற்படுவதாக புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன. (2)

# ...மூன்றாமிடத்தில்

# ...று எண்ணிக்கை



# மீண்டும் கொவிட்-19 பரவல் 600 விமானங்கள் ரத்து



(பீஜிங்)

சீனாவின் தூர மேற்கு பிராந்தியமான ஜின் ஜியாங் கின் தலைநகரான உரும்கியில், நூற்றுக்கணக்கான விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், உரும்கி திவோபு சர்வதேச விமான நிலையத்தில் 600க்கும் மேற்பட்ட திட்டமிடப்பட்ட விமானங்களை இரத்து செய்ய வழிவகுத்துள்ளன.

இது ஒரு நாளின் மொத்தத்தில் 80 சதவீதத்துக்கும் அதிகம் என விமான தரவு நிறுவனமான வெரிஃப்லை ட்டின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

24 வயது பெண் ஒருவருக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொவிட்-19 தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஐந்து மாதங்களில் புதிய தொற்று கவலையைத் தூண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சி

## வெளிநாட்டினரை நாட்டுக்குள் அனுமதிக்கும் பிலிப்பைன்ஸ்

(பிலிப்பைன்ஸ்)

கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு மத்தியில், நீண்டகால விசா கொண்ட வெளிநாட்டினரை நாட்டிற்குள் அனுமதிக்க பிலிப்பைன்ஸ் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல், நீண்டகால விசா கொண்ட வெளிநாட்டினரை பிலிப்பைன்ஸ் அனுமதிக்கும் என ஜனாதிபதி ரோட்ரிகோ டூர்ட்டேவின் செய்தித் தொடர்பாளர் ஹாரி ரோக் தெரிவித்துள்ளார்.

செல்லுபடியாகும் மற்றும் ஏற்கனவே உள்ள விசாக்களைக் கொண்ட வெளிநாட்டினர், நாட்டிற்குள் வந்தவுடன் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

'நீண்டகால விசா வைத்திருப்பவர்கள், செல்லுபடியாகும் விசாக்களைக் கொண்ட வெளிநாட்டினத்தவர்கள், நாட்டில் வாழவும் வேலை செய்யவும் அனுமதிக்கப்படுகின்றனர். புதிய நுழைவு விசாக்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது' எனவும் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் நாடு படிப்படியாக சில கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளது.

இதன் ஒரு முயற்சியாகவே இந்த அறிவிப்பு பார்க்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த மார்ச் மாதத்தில் வெளிநாட்டவர்கள் நாட்டிற்குள் நுழைவதற்கு குடிவரவு பணியகம் தடை விதித்தது. பிலிப்பைன்ஸ் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டுமே நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

பிலிப்பைன்ஸில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால், 61,266பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 1,643பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# ...ன் சீனக் கடல் வரை ...க நட்பு நாடுகளுக்கு ...ம்- அமெரிக்கா

தொற்று, ஹொங்கொங் மீதான நெருக்கடி போன்ற நடவடிக்கைகளால் சீனா மீது அமெரிக்கா கடும் கோபத்தில் இருந்து வருகிறது. இது தொடர்பாக இரு நாடுகளும் மாறி மாறி பல்வேறு பதிலடிகளை மேற்கொண்டு வருகின்றன. இதே போல் இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் இறையாண்மையை பாதுகாப்பதற்கு பக்கபலமாக இருப்பதாகவும் கூறிவருகிறது.

இந்தியா மற்றும் சீனா இடையே அமைதி நிலவுவதற்கு முடிந்த அனைத்தையும் செய்ய விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்கனவே கூறியிருந்தார். குறிப்பாக கடந்த பல வாரங்களாக, ட்ரம்ப் நிர்வாகம் சீனாவுடனான பிரச்சினையில் இந்தியாவுக்கு ஆதரவாக பேசி வருகிறது.

இந்நிலையில், சீனாவின் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்க கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கு இந்தியாவுடன் வலுவாக துணை நிற்பதாக ட்ரம்ப் நிர்வாகம் மீண்டும் உறுதிப் படுத்தியிருக்கிறது.

தென் சீனக் கடலில் இருந்தாலும், இமயமலையில் இருந்தாலும், சீனாவின் ஆக்ரோஷ போர்க்குணத்தை எதிர்கொண்டு, இறையாண்மையை நிலை நிறுத்துவதில் அமெரிக்கா தனது நட்பு நாடுகளுக்கு துணை நிற்கும் என தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க ஆணையம் (எஸ்சிஏ) தெரிவித்துள்ளது. (ஐ-4)

# அதிகபட்ச பாதிப்பை பதிவு செய்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அசுரவேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ்தொற்றினால், கடந்த 24 மணித்தியாலத்தில் 73, 388 பேர் பாதிப்படைந்ததோடு 963பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்மைய அமெரிக்காவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

உலகிலேயே கொவிட்-19 பெருந்தொற்றினால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல்நாடாக விளங்கும் அமெரிக்காவில், இதுவரை மொத்தமாக 36இலட்சத்து 95 ஆயிரத்து 25பேர் பாதிப்படைந்துள்ளனர். மேலும், மொத்தமாக வைரஸ் தொற்றினால் ஒரு இலட்சத்து 41ஆயிரத்து 118பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் கொவிட்-19 தொற்றினால் மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொண்ட மாநிலமாக நியூயோர்க் விளங்குகின்றது. அங்கு இதுவரை நான்கு இலட்சத்து 31ஆயிரத்து 380பேர் பாதிப்படைந்துள்ளனர். 32ஆயிரத்து 518பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# சக்திவாய்ந்த நிலநடுக்கம் விடுவிக்கப்பட்டது சுனாமி எச்சரிக்கை

(வோஷிங்டன்)

பப்புவா நியூ கினியாவில் கடற்கரை பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது, இதனால் அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கம் 6.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் கொக்கோடாவிலிருந்து வடக்கே சுமார் 114 கி.மீ தொலைவில் நேற்று மதியம் 12.50 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. எனினும் பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் 7.2 ரிக்டர் என்ற அளவில் நிலநடுக்கம் பதிவானதாகத் தெரிவித்துள்ளது. இப்பகுதியில் சேதம் அல்லது உயிரிழப்புகள் குறித்து உடனடி தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை, ஆனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம், நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் இருந்து சுமார் 300 கிலோ மீற்றர் சுற்றளவு வரையில் சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் கடலோரத்தில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)



டுபாய் ஆட்சியாளர்,இந்தியப் பிரதமருடன் கைகுலுக்குவது போன்ற ஓவியத்தை உத்தர பிரதேசத்தை சேர்ந்த ஓவியர் ஒருவர் வரைந்துள்ளார்.

# மின் கட்டண சலுகையால் 300 கோடி ரூபாய் நட்டம்

## பந்துல தகவல்



(கொழும்பு)

**கொவிட் -19 தாக்கத்தை அடுத்து மக்களுக்கு வழங்கும் மின்சாரக் கட்டண சலுகையினால் இலங்கை மின்சார சபைக்கு 300 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

எனினும் மக்களின் நெருக்கடி நிலைமைகளில் சலுகைகளை வழங்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருப்பதாகவும் கூறுகின்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்காக மின் பாவனையாளர்களுக்கு நிவாரணத்தை வழங்குதல் தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டது. 25 வீத சலுகையும், சலுகைக்காலம் வழங்குவதும், தண்டப்பணம் அறவிடாது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் இந்தச் சலுகைகளை விடவும் அதிக சலுகைகளை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேலும் ஏதேனும் சலுகைகளை கொடுக்க வாய்ப்புகள் உள்ளதா? என்பது குறித்து ஆராய கோரிக்கை விடுத்ததற்கு அமைய கொவிட்-19 தொற்று நிலைமையின் காரணமாக மார்ச், ஏப்ரல் மற்றும் மே முதலான மாதங்களில் ஒவ்வொரு மின்சாரக் கட்டணப் பட்டியலின் பெறுமதி பெப்ரவரி மாதத்தின் பெறுமதியிலும் பார்க்க அதிகமாயின் பெப்ரவரி மாதத்திற்கு சமமான தொகை வீதம் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்காக அறவிடுதல் மற்றும் அந்த மின்சாரக் கட்டணப் பணக் கொடுப்பனவை பூர்த்தி செய்வதற்காக 2 மாத கால அவகாசத்தை வழங்குதல் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மார்ச், ஏப்ரல் மற்றும் மே ஆகிய 3 மாதங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை தற்பொழுது செலுத்தியுள்ள பாவனையாளர்களுக்கு கட்டணத்திற்கான பற்றுச்சீட்டுக்களை விநியோகிக்கும் பொழுது அவர்களினால் கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை மீளச் செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபையினால் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின்சாரப் பட்டியலுக்கான கட்டணத்தை செலுத்துவதை தாமதத்தால் மின் துண்டிப்பு மேற்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உண்மையிலேயே மின்சார சபை பாரிய நட்டத்தில் இயங்கிக் கொண்டுள்ளது. இந்நிலையில் கொவிட்-19 வைரஸ் பரவலை அடுத்து மக்களுக்கு வழங்க வேண்டிய சலுகையாக இந்த மூன்று மாதகால சலுகைகளுக்காக அரசாங்கத்திற்கு 300 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் அதனை கருத்தில் கொள்ளவில்லை. மக்களின் மீதான சுமையை குறைக்க வேண்டும். அதற்காகவே நாம் இவ்வாறான சலுகைகளை கொடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் 3 பெண்கள் உட்பட ஆறு பேர் கைது



(அங்குலான)

அங்குலான பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பதற்ற நிலைக்குக் காரணமானவர்கள் என சந்தேகிக்கப்படும் 3 பெண்கள் உட்பட 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அங்குலான பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை அமைதியின்மையும் பதற்ற நிலையும் நிலவியது.

அங்குலான-லுணாவ பகுதியில் கடந்த 10 ஆம் திகதி பொலிஸாரினால் நடத்தப்பட்ட சோதனையின் போது ஆட்டோவில் சென்ற சிலருக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸ் உத்தியோகத்தரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர், களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாகவே நேற்று முன்தினம் அங்குலான பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆறுவது சினம்!

மனிதனுக்கு ஏன் சேர் கோபம் வருகின்றது? என்று கேட்டேன் ஒரு பெரியவரைப் பார்த்து!

அவர் கோபப்படாமல் பதில் சொன்னார். அதனாலே தான் அவர் பெரியவர். ஆசைகள் உருமாறி கோபமாக மாறுகின்றது என்றார் அவர். மனுசன் ஆசைப்படுகின்றான். அது நிறைவேறாமல் போகின்ற போது அவன் மனம் குழம்புகின்றது. அது கோபமாக உரு எடுக்கின்றது. கோபம் வந்தவுடனேயே மனிதன் தன் நிலையை இழந்து விடுகின்றான். நிலைமையைப் புரிந்து கொள்கின்ற சக்தி அவனை விட்டு நீங்கிப்போய் விடுகின்றது, அதனால் கோபத்தில் இருக்கின்ற மனிதன் என்ன வேண்டும் என்றாலும் பேசுவான். என்ன வேண்டும் என்றாலும் செய்வான். கொலை கூடச் செய்வான். இரண்டு பேர் சாதாரணமாக பேசிக் கொண்டு இருப்பார்கள். ஏதாவது ஒரு சூடான வார்த்தை பெரிதாகப் போய் கடைசியிலே இரண்டு பேரும் கத்தியைத் தூக்கிக்கொண்டு நிற்பார்கள்.

ஏன் இப்படி ஆகின்றது என்றால் கோபம் வந்தவுடன் மதிமயங்கிப் போய்விடுகின்றது. அவனுடைய புலன்கள் மேலே அவனுக்கு உள்ள கட்டுப்பாடு அந்த நேரத்திற்கு தளர்ந்து போய்விடுகின்றது. அவர் 'கட்டுப்பாட்டிலே இதெல்லாம் இருப்பதில்லை. அதனால் அவன் என்ன செய்கின்றான் என்பதையே அவன் உணர்வதில்லை. கோபம் என்னும் வலையிலே விழுந்து விடுகின்றான். அதன்பின் மாட்டிக் கொண்டு விழிக்கின்றான். இதெல்லாம் ஒரு பெரியவருடைய கருத்து.

சில கோபம் மிகவும் ஆழமானதாக இருக்கும். சில மிகவும் தீவிரமான கோபமாக இருக்கும். இதைப் பொறுத்து கோபத்தை பல வகையாகப் பிரிக்கலாம். இழிவு மனதை காயப்படுத்துகின்றது. வெறி, ஆத்திரம், எரிச்சல் இதெல்லாம் கோபத்தின் பல வகைகள்.

ஆனால் இதே கோபம்... சுயநலம் இல்லாமல் அடுத்தவனைக் கண்டித்து நல்ல வழியிலே திருப்புவதற்காகப் பயன்படும் போது... அது ஆன்மீகக் கோபமாகக் கருதப்படுகின்றது.

ஒரு பெண்ணின் மானம் காக்க மற்றவன் வெளிப்படுத்துகின்ற கோபம் 'தார்மீகக் கோபம்' இது தவறல்ல. பொறாமை, சுயநலம் இதனாலே ஏற்படுகின்ற கோபம் இருக்கு பாருங்கள்...இதுதான் தவறானது.

ஒரு வாத்தியார் பிள்ளைகளைப் பார்த்துக் கோபப்படுகின்றார். இது என்ன பொறாமையாலே வருகின்ற கோபமா? இவன் என்ன இவ்வளவு நன்றாக படிக்கின்றான்...100 இற்கு 80 மார்க் வாங்குகின்றான்... நாம் படிக்கின்ற காலத்திலே 100 இற்கு 40 மார்க் தானே வாங்கினோம்? அப்படி ஏன்று நினைத்தால் ஆசிரியர் பொறாமைப்படுவார்?

அவர் பெருமைப்படுவார்...அவன் நன்றாகப் படித்தால் அவருக்குப் பெருமை. குரு சீடர்களிடம் காட்டுகின்ற கோபம் அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக.

சின்ன சின்ன விடயத்திற்கெல்லாம் சிலபேர் அடிக்கடி கோபப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அது அவர்களுடைய மனப் பலவீனத்தின் அடையாளம். இப்படிப்பட்ட கோபத்தை அவனாலே அடக்க முடியும்...அதற்கு என்ன செய்ய வேண்டும் தெரியுமா? பொறுமை- சுய பரிசோதனை- மன்னிக்கும் தன்மை-அன்பு-மகிழ்ச்சி-சேவை மனப்பான்மை இவற்றையெல்லாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அகங்காரம் இருக்கு பாருங்க- (Ego -அது தான் கோபத்தின் ஆணிவேர். சுய பரிசோதனை-அதாவது தன்னைத்தானே கேள்வி கேட்டுக் கொள்வது மூலமாக அகங்காரத்தை வேருடன் கிள்ளி எறிய முடியுமாம் என்று அனுபவப்பட்டவர்கள் சொல்கின்றார்கள். மௌனத்தைக் கடைப்பிடிக்கிறது கூட கோபத்தை அடக்கிறதனாலே மிகவும் உதவியாக இருக்குமாம். இப்படிக் கோபத்தைப் பற்றி நிறைய விடயம் இருக்கின்றது.

எல்லாவற்றையும் வளவளவென்று சொல்லிக் கொண்டே இருந்தால்... கேட்டுக் கொண்டிருக்கின்ற உங்களுக்கும் கோபம் வந்துவிடும்.. அதனாலே இத்துடன் நிறுத்திக் கொள்வோம். எங்களில் ஒருத்தன் சொன்னான்...

"சேர் ... நான் தினமும் ஒரு தடவையாவது என் மனைவியைப் பார்த்து திட்டிக்கொண்டேதான் இருப்பேன். இருந்தாலும் ஒரு தடவை கூட அவளுக்குக் கோபம் வந்ததே இல்லை சேர் அப்படி என்றான்.

"அது எப்படியப்பா சாத்தியம்? "என்றேன்.

"எல்லாம் எங்கள் கையிலே தான் சேர் இருக்கின்றது" என்றான் மிகவும் பெருமையாக. "அந்த இரகசியத்தை எனக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடு..." தகவல் கேட்கின்றவர்கள் காதிலேயும் போட்டு வைப்போம் என்றேன். அவன் மெதுவாக அருகில் வந்து...''வேறு ஒன்றுமில்லை சேர்... நான் அவர் முன்னால் நின்று திட்டுகின்ற சமயம் எல்லாம்" அவர் நல்லா தூங்கிக் கொண்டிருப்பா சேர். அது மாதிரி சமயம் பார்த்துத்தான் திட்டுவேன் என்கின்றான்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 210

## காலத்தின் தேவையான பசுமைக் கிராமங்கள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஒரு தேசத்தின் அபிவித்தியென்பது வளர்ந்திருக்கும் பெரிய மாடிக்கட்டடங்களில் இல்லையென்றும் அத்தேசத்திலிருக்கும் கிராமங்களின் வளர்ச்சி மட்டுமேயென்பது நன்றாகவே எமக்கு பொருந்தியிருக்கின்றது. கிராமங்கள் தேசமொன்றின் அபிவிருத்தியில் அதன் வளர்ச்சியில் வைத்துக்கட்டப்படும் செங்கற்களாகும். அனைத்து செங்கற்களும் ஒன்று சேரும் போது தான் அதன் பலத்தை நாம் உணர முடியும். இவ்வாறு கட்டியெழுப்பப்படும் சுவரில்தான் பலமுள்ள கூரை தாங்கிப்பிடிக்கப் படுகின்றது. கிராமங்களை தாவரங்களை வளர்ப்பதற்கு மனம் வேண்டும். மேலும் எமக்குத் தேவையான உணவுப்பொருட்களை பெறக்கூடிய தான பயிர்களை அதனுள் பயிரிடலாம்.


காலநேரம் அறிந்து பயிர்களின் தெரிவு மற்றும் வளர்ச்சி என்பனவற்றுடன் மனை சார்ந்த நிலப்பரப்பில் நீண்ட காலமாக வளர்க்கப்படும் தாவரங்கள் பல்வகையினதாக ஆண்டுப்பயிர்கள், ஈராண்டு மற்றும் பல்லாண்டுப் பயிர்களாக உள்ளடக்கலாம். மனை அமைந்திருக்கும் நிலப்பரப்பில் அமைக்கப்படும் அல்லது வளர்க்கப்படும் தாவரங்களடங்கிய தொகுதியினை மனைத் தோட்டம் எனக் கொள்ளலாம். மனையொன்றுக்குத் தேவை கண்டுகொள்ளல் இலகுவானதாகும். நஞ்சற்ற உலகம் மற்றும் நஞ்சற்ற தேசம் என்பதனை கொள்கையாக கொண்டால் இந்த அவல நிலைக்கு நாம் அனைவரும் இணைந்தே முற்றுப்புள்ளி வைக்கலாம். அந்த வகையில் மனைத் தோட்டங்கள் இணைந்த கிராமத்தை வளர்த்தெடுப்பதே இங்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்முயற்சியாகும்.

பசுமைக் கிராமங்களினூடாக (Green Villages) கிராமத்தை நோக்கிய தொழில்நுட்பத்தின் வருகையும் தொழிற்சாலைகளை கிராமம் நோக்கி நகர்த்தி அங்குள்ளவர்களுக்கான வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட் னக்குறைவினாலும் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரிக்கலாம். அதனால் நாம் இன்னும் மிகுந்த கவனமாக மருத்துவ உலகம் சொல்லும் அறிவுரைகளை முழுமையாகச் செவிமடுத்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடலில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான வழிவகைகளை கண்டறிந்து எம்மை வைரஸ் தாக்காது. பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

சூழலியல் விவசாயம் (Ecological Agriculture) எமது பிரதேசத்திற்கு ஒன்றும் புதுமையானதல்ல. பாரம்பரியமாக நாம் செய்து வருகின்ற விவசாய செய்கையினூடு இயற்கைவழி விவசாயத்தை

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

223



பசுமையாக்கி அவற்றின் வினைத்திறனை அதிகரித்து அதிலிருந்து முழுமையான பயனைப் பெற முயற்சித்திருப்பது காலத்திற்கான கைங்கரியம் எனலாம்.

சேதன விவசாயத்தினை (Organic farming) நோக்கிய முன்னகர்வு தேசத்தின் அபிவிருத்திக்கு நல்லதொரு சகுனமென்றே கூறலாம். ஆனாலும் முழுமையாக சேதன விவசாயத்தில் மட்டும் தங்கி நின்றால் எமக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியுமா? என்னும் வினாவும் எம் முன்னால் முன்வைக்கப்பட்டுள்ளது. அனைத்து மக்களும் சேதன விவசாயத்தை மட்டும் உற்பத்தி செய்தாலும் அதன் மூலம் அனைவருக்கும் உணவு என்பது இலவு காத்த கிளிபோலத்தான் இருக்கும். சேதன விவசாயத்தின் உற்பத்திக்கான உந்துதல் நாம் எதிர்பார்த்தளவில் இல்லை என்பது இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தாலும் அவை முழுமை பெறுவதற்கு பல விடயங்களில் அலசியாராய வேண்டியிருக்கின்றது. சேதன விவசாயம் சாத்தியமா? இல்லையா? என்பதல்ல வாதம். சேதன விவசாயத்தை நோக்கியதான எமது பயிர்ச்செய்கை நிச்சயமாக எமது வளமான சந்ததியை நோயெதிர்ப்புள்ள இளையவர் உலகமாக கட்டியெழுப்ப உதவும். இதற்கான ஒரு அடித்தளமாகவே மனைத்தோட்டத்தை காண்கிறோம். மனைத்தோட்டம் என்பது குறுகிய இடமாயினும் அதில் இவ்வாறான யான அனைத்தையும் நாம் உற்பத்தி செய்து அனைவருக்கும் பகிர்ந்து பெற்றுக்கொள்ளுதல் இந்த மனைத்தோட்டத்தினுள் பொதிந்திருக்கும் உண்மையாகும். இது சரியா? தவறா? மற்றும் சாத்தியமா? இல்லையா? என்னும் வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் நாம் இதனைச் செய்ய முடியும் என முடிவெடுத்து விட்டால் முடியாதா என்ன?

ஐக்கிய நாடுகள் தாபனம் அறிவித்ததன்படி அவர்களால் உருவாக்கப்பட்ட 17 பேண்தகு அபிவிருத்தி இலக்கில் பட்டினிச் சாவிலிருந்து மக்களை காப்பாற்றுதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து பாதுகாப்பு என்பனவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்தல் முக்கியமானதாகும். உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு என்பதனை மனைசார்ந்த பிரச்சினையாக உள்வாங்கினால் அதற்கான தீர்வினை டால் இவையனைத்தும் சாத்தியப்படும் காலம் உண்டு என நம்பலாம். கொரோனா காலத்தில் இதற்கான சாத்தியப்பாடு அதிகமாக இருப்பதாகவே நாம் கவனத்தில் கொள்ள முடியும். எமது நாட்டில் கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலையின் சாத்தியப்பாடு பற்றி மருத்துவ உலகம் மிகவும் கவலை கொண்டிருக்கின்றது. இதுவரைக்கும் எமது அரசாங்கத்தின் இறுக்கமான சட்டதிட்டங்களும் பாதுகாப்புப் படையினரின் அர்ப்பணிப்பான செயற்பாடும் மருத்துவத் துறையின் முழுமையான பங்களிப்பும் கொரோனா வைரஸிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றியிருக்கின்றதென்றால் மிகையாகாது. தற்போது வைரஸ் தொற்றுடன் வெளிநாட்டிலிருந்து உள்வரும் மக்களால் இவ்வாறான தொற்று அதிகரிப்பதற்கு வாய்ப்பிருந்தாலும் எம்மவர்களின் கவ மேம்படுத்துவதும் சூழலை பாதுகாப்பதற்கான இன்னும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்வாங்குவதும் குறிப்பாக சூழலில் இருக்கின்ற நன்மை தருகின்ற உயிரினங்களை விருத்தி செய்து பலமான வளமான வேளாண் தொகுதியை உருவாக்கி ஆரோக்கியமான சிறந்த பயிர்ச்செய்கைக்கு உதவுவதாகும். ஆரோக்கியமான பயிர்ச்செய்கை என்பது நஞ்சற்ற பயிர்களை (Toxin- free plants) உற்பத்தியாக்குதலாகும். அசேதன இரசாயனங்களை நம்பியில்லாத பயிர்ச்செய்கை என காணலாம். பீடைநாசினிகள் நஞ்சுப் பதார்த்தங்கள் என தெரிந்தும் அதனை விசிறி நிரூபித்திருக்கிறார்கள் எங்கள் விவசாய செய்கையாளர்கள்.

இவ் இரசாயனங்களால் விவசாயச்செய்கை காப்பாற்றப்பட்டதாக நாம் நினைத்திருக்க எமது சூழல் வலுவிழந்து, வலிமையிழந்து, வழக்கிழந்தும் போயிருக்கின்றது.

சூழலில் உள்ள நன்மை தரும் உயிரினங்களையும் நாம் கவனத்தில் எடுப்பது நல்லது. குறிப்பாக அயன் மகரந்த சேர்க்கையாளர்கள், இயற்கையெதிரிகள் எனப்படும் இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள், இன்னும் நுண்ணங்கிகள் என்பனவற்றுடன் தாவரங்களின் எண்ணிக்கைக்கேற்ப இதில் மகரந்தச் சேர்க்கையாளர்களின் பங்களிப்பு கணிசமானது.

கிட்டத்தட்ட அறுபது சதவீதத்திற்கும் மேலான பயிர்கள் விலங்குகளிலான அயன்மகரந்த சேர்க்கையை நம்பியிருப்பவையாகும். இவற்றுள் கணிசமான பங்களிப்பைச் செய்கின்ற பூச்சியினத்தின் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது எனலாம்.

பசுமைக் கிராமங்களை உருவாக்கும் திட்டத்தினுள் அனைத்து கிராமங்களையும் உள்ளீர்த்து அதிலிருந்து கொரோனாத் தொற்று அதிகரித்து மக்கள் அவரவர் வாழ்விடங்களில் அடைபட நேர்ந்தாலும் உணவுக்குப் பஞ்சம் வராமல் பார்த்துக் கொள்ள முடியும். இதற்கான வசதி வாய்ப்புக்களை நாம் இன்னும் ஏற்படுத்தி எம்மையும் எம்மக்களையும் உணவுப் பஞ்சத்திலிருந்து காப்பாற்ற உணவுற்பத்தியின் அலகான கிராமங்களை வலுப்படுத்துவோம்.

இது அந்தந்த பிரதேசத்து மக்களாக நினைத்தால் இலகுவில் மாற்றியமைத்துக் கொள்ளலாம். கிராமங்களுக்குள்ளேயே இந்த அரிய பொக்கிஷம் இன்னும் இருக்கின்றது என்பதனை நம்புங்கள்.



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

25

கலாநிதி முருகர் குணசிங்கம்

நிரந்தரமாக அவர்கள் வாழ வழி செய்தனர். ஆனால் 2009 இல் ஈழ விடுதலைப் போராட்டம் இலங்கையில் சீரழிக்கப்பட்ட பிறகு மாணவர்கள் விசா பெற்றுப் போவதற்கும் ஏனையவர்கள் அகதிகளாகப் போவதற்கும் நோர்வே அரசு இறுக்கமான தடைகளை விதித்து உள்ளது.

நோர்வே நாட்டின் புள்ளிவிபர அலுவலகம் இன, மொழி அடிப்படையில் மக்கள் தொகைக் கணக்கு எடுப்பதில்லை.

வயது அடிப்படையில் ஆண், பெண், குழந்தைகள், குடும்பம், தொழில் அடிப்படையிலேயே பதிவுகள் இடம்பெறுகின்றன. 2014 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இந்நூலாசிரியர் நோர்வே நாட்டின் புள்ளிவிபர இலாகாவுக்கு (Statistics Norway) நேரில் சென்று ஆராய்ந்தபோது மேற்படி நிலைமை தெரிய வந்தது.

மேற்கூறப்பட்ட பகுப்பினுள் ஈழத் தமிழர்களின் மக்கள் தொகையை அலசி ஆராய்ந்த பொழுது ஓரளவிற்குத் தரவுகள் கிடைத்தன.

அத்தோடு ஆசியா அறிக்கை மேலும் சில ஆய்வுக் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்ட தரவுகளின்படி சுமார் 13,000 ஈழத் தமிழர் நோர்வே நாட்டில் வாழ்வதாக அறய முடிந்தது. நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோ (Oslo) பெர்கென், ட்ரொம்சோ ஆகிய நகரங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தான் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

### சுவீடன்

1970களின் தொடக்கத்தில் தமிழ் மாணவர்கள் சிலர் உயர் கல்வி கற்பதற்காக மாணவர் விசா மூலம் சுவீடன் நாட்டுப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வி கற்றுப் பின்னர் அங்கு நிரந்த்ரமாகத் தங்கி உள்ளனர்.

கல்வி கற்ற சில தமிழர்கள் வேலை செய்வதற்காக சுவீடன் நாட்டுக்குச் சென்றுள்ளனர். சில தமிழ்ப் பெண்கள் சுவீடன் நாட்டினரைத் திருமணம் செய்து கொண்டு அங்கு நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர்.

மேற்கூறப்பட்ட ஈழத்தமிழர்கள் தொகை சுவீடன் நாட்டில் மிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. ஆனால் 1983 இனப்படுகொலை நிகழ்வுகளுக்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் சுவீடன் நாட்டுக்கும் அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இருப்பினும் சுவீடனில் வாழ்கின்ற ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை ஏனைய ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளைவிட மிகமிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது.

இந்நூலாசிரியர் 2014 மார்ச் இறுதிப் பகுதியில் சுவீடன் நாட்டுப் புள்ளிவிபர மத்திய பணியகம் (Central Bureau of Statistics) சென்று அங்கு உரிய அலுவலர்களைச் சந்தித்து ஆய்வு நடத்திய பொழுது மிகக் குறைந்த அளவு ஈழத் தமிழர்களே அங்கு வாழ்வதாகத் தெரிய வந்தது.


மேலும் பல ஆய்வுக் கட்டுரைகளின் அடிப்படையில் 2009 இல் 5800 இலங்கையர்களும் 2013 இல் 6911 இலங்கையர்களும் சுவீடன் நாட்டில் இருப்பதாகத் தெரிய வந்தது.

ஆனால் இவர்களுள் பெரும்பான்மையினர் சிங்கள மக்களாகவே காணப்படுகின்றனர். 2013 இல் ஈழத்தமிழர்கள் சுமார் 2000 இற்கும் 2500 இற்கும் இடைப்பட்ட தொகையில் இருப்பதாக அறிய முடிகிறது.

அவர்கள் ஸ்ரொன்ஹோம் நகரிலும் (Stockholm) அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் செறிவாக வாழ்ந்து வருகின்றார்கள்.

### டென்மார்க்

1983 இனப்படுகொலைகளுக்கு முன்னதாக டென்மார்க் நாட்டுக்கு ஈழத்தமிழர்கள் சிறு அளவிலேனும் சென்றமை பற்றி பதிவுகள் டென்மார்க் புள்ளி விபர நிறுவனத்தில் (Danish Statistical Agency) இடம்பெறவில்லை என்பது, இந்நூலாசியர், 2014 மார்ச் மாத நடுப் பக்கத்தில் அங்கு சென்று ஆய்வுகள் நடத்தியபோது தெரிய வந்தது.



ஆனால் 1983 இல் இருந்து ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி டென்மார்க் நாட்டுக்குச் சென்று புகலிடம் பெற்றனர்.

அவர்கள் டென்மார்க் அரசு குறிப்பாக சமூக இணைப்பு இலாகா (Ministry of social and Intrgration) தற்காலிகமாக ஏற்றுக் கொண்டது.

மேலும் இலங்கை அரசியல் நிலைமை சீரடையும்போது ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்புகின்ற திட்டத்திலேயே அவர்களுக்குத் தற்காலிக அகதி அந்தஸ்துக் கொடுக்கப்பட்டது.

அவர்களை, சான்ட்ஹெறால்ம் (Sand holm) என்ற இடத்தில் அகதிகள் முகாமில் தடுத்து வைத்து இருந்தனர்.

ஆனால் இலங்கையில் சிங்கள அரசப் படைகளுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் இடம் பெற்ற தொடர்ச்சியான போர் காரணமாகவும் அங்கு மிகவும் சீர்குலைந்த அரசியல் நிலைமை காரணமாகவும் மேற்படி ஈழத்தமிழர்களுக்கு நிரந்தரமாக டென்மார்க்கில் தங்குவதற்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது.

தொடக்கத்தில் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் அகதிகள் முதலில் தமது மனைவி, அல்லது கணவன், பிள்ளைகளை விட்டுத் தனியானவே டென்மார்க் சென்றனர்.

திருமணம் ஆகாத இளம் வயதினரே கூடுதலாகக் காணப்பட்டனர். டென்மார்க்கில் நிரந்தரமாக வாழ அகதி அந்தஸ்து பெற்றவுடன் தமது குடும்பத்தினரை டென்மார்க் அரசின் குடும்ப மீள் இணைவுக் கொள்கைப்படி தம்மோடு இணைத்துக் கொண்டனர்.

திருமணம் ஆகாமல் சென்றவர்கள், திருமணத்தின் மூலம் தமது கணவனை அல்லது மனைவியை டென்மார்க்குக்கு வரவழைத்து ஒன்று சேரவும் வழிவகுக்கப்பட்டது.

டென்மார்க் புள்ளி விபர நிறுவனம், வெளிநாட்டில் இருந்து வந்து குடியேறுபவர்களை இன, மத அடிப்படையில் விபரங்களை உள்ளடக்காது, புவியியல் அடிப்படையிலேயே புள்ளி விபரங்களைப் பதிவு செய்துள்ளனர். எனவே ஈழத் தமிழர்கள் பற்றிய சரியான மக்கள் தொகையைப் பிரித்து அறிவது எளிதாக இல்லை.

டேனிஸ் புள்ளி விபர அறிக்கையின் படியும் மேலும் பல்வேறு ஆய்வு அறிக்கைகள், கட்டுரைகளிலும் இருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளை ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வு செய்தபோது 2011 இல் சுமார் 10,000 இற்கும் 12,500 இற்கும் இடைப்பட்ட தொகையில் ஈழத்தமிழர்கள் டென்மார்க்கில் வாழ்கின்றார்கள்.

இவர்கள் டென்மார்க்கின் மத்திய பகுதிப் பிரதேசங்களில் குறிப்பாக கேர்ணிங் (Herning), பிராண்டே (Brande), ராம் (Tarm), ஸ்ரூவர் (Struer) பில்லுண் (Billund) நகரங்களில் செறிந்து வாழ்வதாக அறிய முடிகிறது.

### அமெரிக்க நாடுகள்
### வட அமெரிக்கா

வட அமெரிக்காவிற்கு ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து சென்றமையைப் பற்றி இருப்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் எவ்விதப் புள்ளி விபரங்களையும் பெற முடிவில்லை.

ஆனால் 1917 இல் புகழ் பெற்ற கல்வியாளரும் தத்துவ ஆசிரியரும் சிறந்த ஆய்வு நூல்களை எழுதி, உலக அறிவிற்கு அளப்பெரிய பங்களிப்புச் செய்தவருமான கலாயோகி ஆனந்த குமாரசுமாமி என்பவர் அமெரிக்கா சென்று, அங்குள்ள போஸ்ரன் நுண் கலைப் பொருட்காட்சிச்சாலையில் (Boston Fine Arts Museum) உயர் பதவி பெற்று, தன்.இறுதிக் காலம் வரை அங்கு பணிபுரிந்து வாழ்ந்துள்ளார் என்ற மிகவும் மகிழ்ச்சியும் வியப்பும் தரும் செய்தியுடன், அமெரிக்காவிற்கும் ஈழத்தமிழருக்குமான வரலாற்றுத் தொடர்புகள் தொடங்குகின்றன.

அப்பெருமகனைத் தொடர்ந்து மேலும் ஒரு தலைசிறந்த கல்விமான், மானிடவியலாளர், மூன்று கலாநிதிப் பட்டங்கள் பெற்றவர், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் முதல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர், பல நாடுகளில் உயர் பதவிகள் வகித்தவராகிய எஸ்.ஜே.தம்பையா என்பவர் முக்கிய இடம்பெறுகின்றார்.

இவர், 1976 இல் அமெரிக்காவில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகமாகிய ஹாவார்ட் (Harvard) பல்கலைக் கழகத்தில் மானுடவியல் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்து பல்வேறுபட்ட கல்விசார் பங்களிப்பைச் செய்து அண்மையில் அமெரிக்காவில் இயற்கை எய்தினார்.

1970 களில் இருந்து பல மருத்துவர்களும் கணனித்துறை சார் வல்லுநர்களும் பொறியிலாளர்களும் ஈழத்தில் இருந்து அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்து அங்கு நிரந்தரமாக வதிவிட உரிமை பெற்று, அமெரிக்கக் குடியுரிமையும் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

மேலும் பல நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்கள், புலமைப்பரிசில் பெற்றும் தனிப்பட்ட முறையிலும் பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று பின்னர் அமெரிக்காவில் வதிவிட உரிமை பெற்று நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர்.

1980களை அடுத்து வருகின்ற காலப்பகுதியில், ஈழத்தமிழர்களைப் பொறுத்து அமெரிக்காவிற்குப் பெருமளவில் அரசியல் அகதிகளாச் செல்கின்ற நிலைமை உருவாகியது.

ஐக்கிய அமெரிக்காவின் குடிசன மதிப்புப் பணியகத்தின் (United Stated Census Bureau), புள்ளி விபரங்களும் ஏற்கனவே கருத்தில் கொள்ளப்பட்ட நாடுகளைப் போல் இன, மொழி அடிப்படையில் கணக்கிடப்படவில்லை.

1975 இற்கு முன்னதாக இலங்கையில் இருந்து அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்த மக்கள் தொகை "ஏனைய ஆசியர்கள்" (Other Asian) என்ற பெரும் பகுதிக்குள் அடக்கப்பட்டு இருக்கின்றது.

(தொடரும்)

# போர்க்குற்றவாளிகளைக் காப்பாற்றவே தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைப்பு

## பலமான கட்சியாக பாராளுமன்றம் செல்ல மீனுக்கு வாக்களியுங்கள்

(யாழ்ப்பாணம்)



**கொரோனாத் தொற்று அதிகரிக்கும் இக்காலப்பகுதியில் நோய்க்குப் பயந்து வாக்களிக்காது விட்டால் தமிழ் மக்களின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாய் மாறிவிடும் என நேற்று முன்தினம் உடுத்துறைப் பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சின்னமான மீன் சின்னத்திற்கு தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று உங்களிடம் கோருவதற்காகவே இங்கு வந்துள்ளேன். இம்முறை பாராளுமன்றத் தேர்தல் மிகவும் முக்கியமானது. இனி இணக்க அரசியலுக்கு இடமில்லை. நாம் கொள்கை ரீதியாக எமது பாதையை வகுத்து அதில் நாட்டமுடனும் நேர்மையுடனும் பயணிக்க வேண்டியுள்ளது.

அதன்போது பல சிக்கல்களுக்கு நாம் முகம்கொடுக்க நேரிடும். தற்போது எம் மக்களின் மனதில் பயத்தை ஊட்ட வல்லதாக இருப்பது எம் மத்தியில் விரிவுபடுத்தப்பட்டுவரும் இராணுவப் பிரசன்னமே.

பல வேட்பாளர்களின் வீடுகளுக்கு புலனாய்வு அதிகாரிகள் செல்கின்றார்கள். அங்கு அவர்கள் வேட்பாளர்களின் இதுவரையான பயணங்கள், இனிப் போகப் போகும் இடங்கள், கூட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ள இடங்கள் போன்ற பல விபரங்களை குறித்துக் கொண்டு செல்கின்றார்கள் என்று தெரிய வருகின்றது. இதனால் வேட்பாளர்கள் பயத்தில் இருக்கின்றார்கள் என்று கேள்வி. இவ்வாறான செயல்கள் மக்களை வாக்களிக்கச் செய்யவிடாது.

அதுமட்டுமல்ல, பாதைகளில் பல வீதிச் சோதனைச் சாவடிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஜூலை 5 ஆம் திகதி தேர்தல் ஆணையகத்தின் கிளிநொச்சி தேர்தல் அலுவலர் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த போது இரு தடவைகள் நிறுத்தப்பட்டார். அவரின் மோட்டார் சைக்கிள் பின் பெட்டியைத் திறக்க அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

தேர்தல் ஆணையக அதிகாரிக்கு இந்த நிலை என்றால் பொதுமக்களின் பாடு எவ்வாறிருக்கும் என்று யூகிக்க முடியும். இத்தனைக்கும் இவ்வாறான அதிகாரம் பொலிஸாருக்கே உண்டு. இராணுவத்தினருக்குக் கிடையாது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரே இராணுவத்தினருக்கு இவ்வாறான அதிகாரங்கள் வந்து சேரும். கொரோனாத் தொற்று காரணத்தினால் அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆகவே மக்களும் அதிகாரிகளும் மீண்டும் பயத்தில் வாழத் தொடங்கியுள்ளார்கள். இந்தப் பயம் தேர்தலைப் பாதிக்கக்கூடும்.

2013 இல் நான் வடமாகாண சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் காலத்தில் அரசாங்க சார்பு வேட்பாளர்களின் நன்மைக்காக அரச வளங்களை திட்டமிட்டு தவறான முறையில் பயன்படுத்தினார்கள். அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகக்கூறி தேர்தல் பிரசாரங்கள் நடத்தப்பட்டன. பல வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தலுக்கும் வன்முறைகளுக்கும் ஆளானார்கள்.

இவ்வாறு தேர்தல் சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டன. ஜனநாயகம் இந் நடவடிக்கைகளினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. காலை வெகுநேரம் வரையில் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குப் போவதைத் தவிர்த்தனர். அப்போது ஆட்சியில் இருந்தவர்களின் ஆதரவாளர்கள் சட்டத்திற்குப் பயப்படாமல் குடாநாடு எங்கும் வலம் வந்தார்கள். வாக்குகளைச் சிதறடித்து தமிழ் மக்கள் சார்பான கட்சிகள் வெற்றியீட்டுவதைத் தவிர்ப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. அப்படி இருந்தும் மக்கள் மிகச் சாதுர்யமாக வாக்களித்து என்னை 133,000 இற்கு மேலான வாக்குகளைப் பெறச் செய்து வெற்றி எய்திக் கொடுத்தார்கள். இன்று அன்றைய அரசாங்கமே மீண்டும் வந்துள்ளது. அதுவும் அன்று இராணுவத்தை வழிநடத்தியவர் இன்றைய ஜனாதிபதி.

இம்முறை கொரோனா வேறு வந்துவிட்டது. மக்கள் நோய்க்குப் பயந்து வாக்களிக்காது இருந்தால் தமிழ் மக்களின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாய் ஆகிவிடும். ஏற்கனவே பலவிதங்களில் வடக்கு - கிழக்கில் சிங்கள மயமாக்கலும் பௌத்த மயமாக்கலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தக்க கொள்கைகளுடன் செயலாற்றும் நேர்மையுள்ள, பயப்படாத வேட்பாளர்களை எமது மக்கள் தேர்ந்தெடுக்காவிட்டால் சென்ற 5 வருடங்களில் தமிழ்ச் சமூகம் பாதிப்படைந்தது போலவே மேலும் வருங்காலத்தில் பாதிப்படையும். ஆகவே நாங்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

நாம் தேர்தல் வாக்களிப்புக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இராணுவத்தை முகாம்களில் முடக்குமாறு கோரவிருக்கின்றோம். சட்டம் ஒழுங்கின் பாதுகாவலராய் பொலிஸாரை நியமிக்குமாறும் இராணுவத்தினரை திரும்ப எடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோரவிருக்கின்றோம்.

தேர்தல்களின் போது சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவதை சட்ட ரீதியாக நியாயப்படுத்த முடியாது. நர்ட்டின் உள்ளகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸாருக்கு அரசியலமைப்பு மூலமான கடமை உள்ளது. அதுவும் தேர்தல்களின் போது அவர்களுக்கு பல கடப்பாடுகள் உண்டு. ஆகவே பொலிஸாரின் செயற்பாடுகளை பலப்படுத்துவது சம்பந்தமாகவும் கோரவிருக்கின்றோம்.

அத்துடன் தேர்தல் ஆணையகம் சகல பாதுகாப்பு பணிகளையும் பொலிஸார் மூலம் செய்ய வேண்டிய ஒரு கடப்பாடு உண்டு. இதையும் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தவிருக்கின்றோம். அதற்காகப் பொலிஸார் மீது மக்களுக்குப் பெருமளவு நம்பிக்கை உள்ளதாகக் கொள்ளக்கூடாது. தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாப்புப்படைகள் மீது பரந்தளவில் அவநம்பிக்கையும் பயமும் இருப்பது போலவே பொலிஸார் மீதும் அவநம்பிக்கை உண்டு. ஆகவே இப்பொழுதிருந்தே மக்கள் தம்மை தேர்தல்களுக்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் நடத்தப்படும் நாளில் வாக்குரிமை இருக்கும் யாவருமே வாக்குச் சாவடிகளுக்கு கொரோனா முகமூடி அணிந்து செல்ல வேண்டும். சமூக இடைவெளியைப் பாதுகாத்துக் கொண்டு மீன் சின்னத்திற்கு முதலில் வாக்களிக்க வேண்டும். அதன்பின் 1 தொடக்கம் 10 வரையிலான இலக்கங்களில் உங்களுக்கு விருப்பமான மூன்று இலக்கங்களுக்கு அடையாளம் இடவேண்டும். அரசாங்க சார்புக் கட்சிகளுக்கு வாக்கிடுவதால் தமிழ் மக்களின் வருங்காலம் பிரகாசமடையாது. அரசாங்க சார்புக் கட்சிகள் எனும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதனுள் அடங்கும். மாறாக மேலும் மேலும் தமிழ் மக்கள் வாழ்க்கை சிங்கள ஆதிக்கத்தினுள் அமிழ்ந்து விடும்.

கடந்த நான்கரை வருடங்களாக நல்லாட்சி என்ற பெயரில் உருவான அரசாங்கத்துடன் இணக்க அரசியலைச் செய்துவந்த கூட்டமைப்பினர் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எந்தவிதமான பலமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் காலத்தைக் கடத்திவிட்டு தற்போதைய தேர்தல் காலத்தில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதும் கண்துடைப்பு வேலைகளையே செய்து வருகின்றார்கள். இவர்கள் நினைத்திருந்தால் பாராளுமன்றத்தில் இருந்து பேரம் பேச வேண்டிய நேரத்தில் பேரம் பேசி எங்கள் அரசியல் கைதிகளை விடுவித்திருக்கலாம். அத்துடன் தற்போதும் கூட தொடர்ந்துவரும் அரசாங்கங்கள் தமிழ் அரசியல் கைதிகளைப் பணயக் கைதிகளாகவே வைத்துக் கொண்டு வருகின்றன.

சிங்களப் போர்க் குற்றவாளிகளைக் கைதில் இருந்து தப்ப வைக்க, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் நடைபெறாதிருக்க, மேற்படி தமிழ் அரசியல் கைதிகளைப் பணயமாகப் பாவிக்கவே அவர்களைத் தொடர்ந்தும் சிறையில் வாட வைத்திருக்கின்றார்கள். ஆகவே நாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் சட்ட ரீதியாக கட்டமைப்புக்களை உருவாக்கி செய்யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் நாம் பரிசீலித்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

அதேசமயம் ஜனாதிபதியுடன் இவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். முக்கியமாக தெரிவு செய்யப்படும் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐ.நா. சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், இந்திய அரசு ஆகியவற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்போம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் வகையில் கடந்த 11 வருடங்களாக அவர்களின் உறவுகள் போராடி வருகின்றனர். அவர்களையும் உள்ளடக்கிப் போராட்டங்களை நிலத்திலும் புலத்திலும் விரிவுபடுத்தி போராட்ட வடிவங்களையும் விரிவுபடுத்தி செயற்படுவோம். போராடும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை அறிந்து, நிறைவேற்றக்கூடிய தேவைகளை புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்பதனை இத்தருணத்தில் நான் தமிழ் மக்களாகிய உங்களுக்குக் கூறி வைக்க விரும்புகின்றேன்.


நாம் ஒருபலமான கட்சியாக பாராளுமன்றம் செல்வதற்கு நீங்கள் உங்கள் வாக்குகளை மீன் சின்னத்திற்கு இட வேண்டும் என தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றேன்.

தமிழ் மக்களின் வருங்காலத்தை செழுமையடையச் செய்யக்கூடிய ஒரேயொரு கட்சி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியே என்று கூறி மீனுக்கு வாக்களியுங்கள் என நீதியரசர் தெரிவித்தார். (2-4)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2020-16.08.2020

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சொந்த வீடான ரிஷபத்தில் உச்சம் பெற்று சந்திரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களில் பதிவாகின்றது. எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். இடமாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் எதிர்பார்த்தபடி அமையலாம்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூலை 27ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 10-ம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம். உயரதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முடிவுகளை பரிசீலனை செய்வீர்கள்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 30 ஆம் திகதி மிதுன இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். இதுவரை அஷ்டமத்தில் சஞ்சரித்த சுக்கிரன் இப்பொழுது பிதுர்ராஜித ஸ்தானத்திற்கு வருவதால், தந்தைவழி உறவில் இருந்த பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிய வழிபிறக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலை விரிவு செய்து கொள்ள சந்தர்ப்பங்கள் கைகூடி வரும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12ஆம் திகதி மேஷ ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். தன சப்தமாதிபதியான செவ்வாய் சப்தம ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். பணத் தேவைகள் பூர்த்தியாகும். சொந்த பந்தங்களால் வந்த மனக்கசப்புகள் அகலும். 'உடன்பிறப்புகளுக்கு கல்யா




ணம் பேசிப்பேசி விட்டுப் போகிறதே' என்றெல்லாம் மனக்குழப்பத்தோடு இருந்த உங்களுக்கு, இப்பொழுது நல்ல பலன் கிடைக்கப் போகின்றது.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இலாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது வருமானம் வந்து கொண்டே இருக்கும். காரியத்தை தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டால் யாருடைய உதவியேனும் உங்களுக்கு கிடைத்து காரியம் வெற்றிகரமாக முடிந்துவிடும். வீடு, இடம் வாங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

உத்தியோக வாய்ப்பு கைகூடும். இம்மாதம் இல்லத்து பூஜை அறையில் விஷ்ணு படம் வைத்து, நாக கவசம் பாடி வழிபட்டால் நல்லது நடக்கும்.

பெண்களுக்கான பலன்கள்!

இம்மாதம் சுக்கிர பலமும், குரு பலமும் சாதகமாக இருப்பதால் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள்.

ஏற்றத்தாழ்வாக இருந்த பொருளாதாரம் சீராகும். பணிபுரியும் பெண்களுக்கு பாதிப்புகள் ஏற்படாது என்றாலும் மனப்பயம் அதிகரிக்கும். ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

சர்ர்வரி வரும் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் குரு வீட்டில் பலம் பெற்றிருக்கின்றார். தன ஸ்தானத்தில் குரு, சனி, கேது ஆகிய மூன்றும் கூட்டுக்கிரக யோகம் தரும் விதத்தில் சஞ்சரிக்கின்றன. எனவே பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். புதிய சந்தர்ப்பங்கள் வந்து உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியை வ்ழங்கும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூலை 27ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கின்றார். அவர் சூரியனோடு இணைவதால் புத-ஆதித்ய யோகம் உருவாகின்றது. இதன் விளைவாக அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோக முன்னேற்றம், ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். அவர்களின் வேலை வாய்ப்புக் கருதி எடுத்த முயற்சியிலும் வெற்றி உண்டு.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 30ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். 12-க்கு அதிபதி சுக்கிரன் 8ஆம் இடத்திற்கு வரும்பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப 'விபரீத ராஜயோகம்' உங்களுக்கு செயற்படப் போகின்றது. எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திடீரென நல்ல வாய்ப்புகள் உங்களைத்




தேடிவரும். குடும்ப வருமானம் கூடுவதற்கு வழிபிறக்கும். வெளி நாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த அனுகூலத் தகவல் வந்து சேரும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இக்காலத்தில் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். மேலதிகாரிகள் நீங்கள் கேட்ட சலுகைகளைத் தருவர். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். ஆகாரக் கட்டுப்பாட்டின் மூலமாக ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்வீர்கள்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியான புதன், தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்திற்கு வரும்பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி இல்லம் தேடி வரும். தக்க தருணத்தில் உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். இம்மாதம் ராஜ அலங்கார முருகன் படத்தை இல்லத்து பூஜை அறையில் வைத்து, வெற்றி வேலன் பாமாலையை பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்!



இம்மாதம் இராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் பலம் பெற்று சஞ்சரிப்பதாலும், தனாதிபதி வியாழன் தன ஸ்தானத்திலேயே வீற்றிருப்பதாலும் வருமானம் திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் உண்டு. அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்...)

# அரசியல் பழிவாங்கல் கைதுகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் கைதுகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். இவ்வாறான கைது முயற்சிகள், இணக்கப்பாட்டு அரசியலில் அரசாங்கத்திற்கு நாட்டமில்லை என்பதையே வெளிப்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில், நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சமூகம்சார் அரசியல் நலன்களை முன்னெடுக்கும் சிறுபான்மைத் தலைவர்களை, ராஜபக்ஷக்களின் அரசாங்கம் நெருக்குதலுக்குள்ளாக்கி வருகின்றமை கவலையளிக்கிறது. விசாரணை, கைது, பிடிவிறாந்து, வாக்கு மூலமென என அரசாங்கம் தொல்லை செய்கிறது என அவர் குற்றஞ்சாட்டினார். (ஜ-4)

# பொதுப் போக்குவரத்தில் யாசகம் பெறத் தடை

(கொழும்பு)

கொரோனா பரவுவதை கட்டுப்படுத்த பேருந்துகள் மற்றும் புகையிரதங்களில் யாசகம் பெறுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தனியார், அரச பேருந்து நிறுவனங்கள் மற்றும் புகையிரத திணைக்களம் ஆகியவற்றுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் பேருந்துகள் மற்றும் புகை யிரதங்களில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க தொடர்ந்தும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று முன்தினம் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

சில யாசகர்கள் பயணச் சீட்டுக்களை பெற்று பேருந்து மற்றும் புகையிரதங்களில் ஏறுவதாகவும் சிறிது தூரம் சென்றதும் பயணிகளிடம் யாசகம் பெற ஆரம்பிப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாசகர்களின் செயல்கள் கொரோனா வைரஸ் பரவலுக்கு காரணமாக அமையலாம் என்பதால், அது குறித்து கவனம் செலுத்தி, பேருந்து மற்றும் புகையிரதங்களில் யாசகம் பெறுவதை தடை செய்யுமாறும் அமைச்சர் உத்தர விட்டுள்ளார். (ஜ-8)

# தாஜுடீன் கொலை விவகாரத்தில் முக்கிய சந்தேகநபர் காலமானார்

(கொழும்பு)

ரக்பி வீரர் வசிம் தாஜுடீன் கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபர்களில் ஒருவரான, கொழும்பு முன்னாள் தலைமை நீதித்துறை அதிகாரி, பேராசிரியர் ஆனந்த சமரசேகர காலமானார். கொழும்பு மேலதிக நீதவான் மன்றில் சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று முன்தினம் இந்தத் தகவலை வழங்கியது.

நீதிமன்றத்தில் ஆஜரான துணை சொலிசிட்டர் ஜெனரல் திலன் ரத்நாயக்க, இதனை அறிவித்தார்.

அத்துடன், பிறிதொரு சந்தேக நபரான முன்னாள் சிரேஷ்ட டி.ஐ.ஜி அனுர சேனநாயக்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.



முன்னதாக, ரக்பி வீரர் தாஜுடீன் கொலை வழக்கில் முன்னாள் டி.ஐ.ஜி அனுர சேனநாயக்க, ஆதாரங்களை மறைத்ததாக கொழும்பு உயர் நீதிமன்றம் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தது.

நவம்பர் 19ஆம் திகதி இரண்டு சந்தேக நபர்கள் தொடர்பான அறிக்கையை முன்வைக்க சிஐடிக்கு நீதவான் உத்தரவிட்டார். (ஐ-4)



# ஆன்மீகம்

## வாழ்க்கையை எட்டு எட்டாகத் திட்டமிடுவோம்



முறைப்படுத்திய முயற்சிகளாலேயே நாம் வாழ்வில் முன்னேற்றம் அடைய முடியும். எடுத்தேன், கவிழ்த்தேன் என பரபரப்பாகச் செயற்படுவது படபடப்பை அதிகமாக்குமே தவிர பலன் எதையும் தராது. இலட்சியத்தை ஒரே எட்டில் அடைந்தவர்கள் எவருமே இல்லை. 'முதலில் இதைச் செய்வோம். பிறகு அதைச் செய்யலாம். இருபடி நிலைகளையும் கடந்த பின் மூன்றாவதாக இன்னும் ஒன்றை மேற்கொள்வோம்' என்று முன்கூட்டியே முறையாக திட்டமிடுதல் முன் வெற்றியை நமக்கு அளிக்கும் என்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. ஏறிப்பறக்க வேண்டிய இளநீரையும், எட்டிப்பறக்க வேண்டிய மாம்பழத்தையும் உட்கார்ந்தே பறிக்கும்படி செய்து விட்டார்கள் இன்றைய விவசாய விஞ்ஞானிக்ள். அதனால்தான் உழைத்து பெறவேண்டிய உயர்நிலைப் பதவிகளை ஒரு சில மணிநேரத்தில் பெற்று விட நினைக்கிறது இன்றைய இளைஞர் சமுதாயம் என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தால் கூட போதாது. அதுவும் நழுவி வாயில் விழ வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் அதிகம் பேர் இருக்கின்றார்கள். ஆனால் முறைப்படி திட்டமிட்டு முனைப்புடன் செயலாற்றினால் வாயில் என்ன, வயிற்றிலேயே கனி விழும் என்பது தான் வரலாற்று உண்மை! இலக்குமி தேவி உன் விலாசத்தை விசாரித்துக் கொண்டு உன் வீட்டிற்கு வந்து கதவை தட்டுவாள், கனகம் கொட்டுவாள், உன் முயற்சிகள் முறைப்படி அமைந்தால் என்கிறார் திருவள்ளுவர்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையன் உலை

சரியான திட்டமிடுதல் ஆரம்பத்திலேயே சரிபாதி வெற்றி பெறுதலுக்கு சமானம். (A GOOD PLANNING IS HALF DONE) பாதை ஓரத்தில் மரக்கன்றுகளை நடும் பணி ஒன்று ஒப்பந்தக்காரர் மூன்று பணியாட்களை நியமித்தால் ஒவ்வொருவரிடம் ஒரு ஒரு செயல் ஒப்படைக்கப்பட்டது. அதாவது ஒருவர் குழி வெட்டி விட்டு செல்ல வேண்டும். அடுத்தவர் அதில் மரக்கன்றை நட வேண்டும். மூன்றாமவர் வெட்டிய குழியை மூடவேண்டும். ஒப்பந்ததாரர் ஊழியர்களிடம் பணியை ஒப்படைத்து விட்டு ஊருக்கு சென்று விட்டார்.

வந்து பார்த்தால் வேலை எதுவுமே நடைபெறவில்லை .ஆனால் இரு ஊழியர்கள் சம்பளம் தாருங்கள் என்று சச்சரவு செய்தனர். என்ன நடந்தது தெரியுமா? முதல் ஊழியர் குழியை வெவ்வேறு இடங்களில் தோண்டினார்.

இரண்டாம் ஊழியர் வேலை மரக்கன்று நடுதல். ஆனால் அவர் விடுமுறை எடுத்துக்கொண்டு விட்டார். வேலை செய்ய வரவில்லை.

மூன்றாவது ஊழியரோ குழியை மூடும் பணியை சிறப்பாக செய்தார். இப்படித்தான் அலங்கோலமாகி விடுகின்றன. அவசரத்தில் செய்யும் பணிகள் வரவுக்கு ஏற்ற வண்ணம் செலவுகளை கட்டுப்படுத்தி சிக்கனமாக விளங்கும் குடும்பம் சிறந்து விளங்கும். 'வரவு எட்டணா! செலவு பத்தணா! அதிகம் ரெண்டணா! கடைசியில் துந்தணா!' எனத்திட்டம் போடாத குடும்பம் தடுமாறுகிறது. குடும்பம், பள்ளிக்கூடம், அரசாங்கம், அலுவலகம் என அனைத்தும் சிறப்பது திட்டமிடுவதால்தான்! அவ்வாறு திட்மிடுவதோடு அக்காலகட்டத்திற்குள் செயல் புரிவதாலும்தான்! பாடசாலைக்குச் செல்லும் தன் மகளிற்கு காலை சிற்றுண்டி, மதிய உணவுக்குச் சாப்பாடு, தனக்கும் தன் கணவருக்கும் அலுவலகத்திற்கு எடுத்துச் செல்ல உணவு என்னென்ன தயாரிக்க வேண்டும் என்பதை முதல் நாள் இரவே சிந்தித்து திட்டம் போடும் குடும்பத்தில் மறுநாள் காலை நேரப் பிரச்சினைகள் எழுவதில்லை.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றம்

(கொழும்பு)

ஜா - எல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் 16 ஆம் திகதி கூடிய பொலிஸ் ஆணைக்குழு இதற்கான தீர்மானத்தை எடுத்தது.

ஜா - எல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட சிலர், தேர்தல் சட்ட திட்டங்களை அமுல் செய்ய தவறியுள்ளதாகவும், தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய, அவரை இவ்வாறு இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முறைப்பாடுகள், கோரிக்கைக்கு அமைவாக ஜா-எல பொலிஸ் பொறுப்பதிகாரியை உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமை யகதுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது " என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-4)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

(களனி)

களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவத்த, கோணாவல பகுதியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பகுதியில் வாடகை அறையொன்றில் தங்கியிருந்த இரு நண்பர்களுக்கிடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மோதல் காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவருக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஒருவர் மற்றையவரை கூர்மையான ஆயுதத்தினால் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த நபர் கிரிபத்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ஐ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 250 |
| தக்காளி | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 |
| கோவா | 150 | 120 | 120 |
| கரட் | 100 | 150 | 160 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 140 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 250 | 280 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 90 | 120 | 100 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 250 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 180 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60-80 |
| இராசவள்ளி | -- | 250 | -- |
| வெங்காயப்பூ | 250 | 250 | 240 |
| முள்ளங்கி | 100 | 100 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 30 |
| வல்லாரை | 60 | 50 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 |




## குதிரைக் கடிவாளமும் மொட்டையும்

ஒரு ஊரில் ஒரு ராஜா வீரத்தில் வல்லவர். தனது நாட்டை சீரும் சிறப்புமாக அரசாட்சி செய்து வந்தார். அவருக்கு ஒரு மந்திரி இருந்தார். ராணியும் மந்திரியின் மனைவியும் நெருங்கிய தோழிகள்.

ஒருநாள் மாலையில் அந்தப்புரத்தில் ராஜாவுக்கும் ராணிக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. ராஜா எவ்வளவோ கூறியும் ராணி சமாதானமாகவில்லை.

உன் கோபம் தணிய நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார் ராஜா.

'நீங்கள் ஒரு குதிரையைப் போலக் கடிவாளம் கட்டிக்கொண்டு, என்னைச் சுமந்து கொண்டு குதிரையைப் போலவே கனைக்க வேண்டும்' என்றாள்.

வேறுவழி இல்லாததால் ராஜாவும் அதேபோல் செய்தார். ராணியின் கோபம் தணிந்தது.

ராணியின் தோழியாகிய மந்திரியின் மனைவி இதைப் பார்த்து விட்டாள். அவளும் தன் கணவரிடம் எந்தக் காரணமும் இல்லாமல் கோபித்துக் கொண்டாள்.

உன் கோபம் தணிய நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார் மந்திரி.

'நீங்கள் உங்கள் தலையினை மொட்டையடித்துக் கொண்டு என்னைச் சுற்றி வந்து என் காலில் விழுந்து வணாங்கவேண்டும!' என்றாள் அவள்.

வேறுவழி இல்லாததால் மந்திரி, தன் தலையினை மொட்டையடித்துக்கொண்டார். தன் மனைவியைச் சுற்றிவந்து அவள் காலில் விழுந்து வணங்கினார்.

மறுநாள் அரசபைக்கு வந்த மந்திரியைப் பார்த்த ராஜா, 'என்ன மந்திரியாரே திடீரென்று மொட்டைபோட்டுள்ளீர்?' என்றார்.



அதற்கு மந்திரி, 'ராஜா தாங்கள் குதிரையைப் போலக் கனைத்ததால்தான் நான் திடீரென்று மொட்டைபோட வேண்டியதாயிற்று' என்றார்.

அரசவையில் இருந்தவர்களுக்கு ஏதும் புரியவில்லை.

பின்னாளில் இதன் காரணத் தைத் தெரிந்து கொண்டவர்கள் மந்திரிக்குத் தலைமுடி வள ரும் வரை அவரைக் கேலி செய்தனர்.

குதிரை கனைக்கும் சப்தத்தைக் கேட்கும் போதெல்லாம் ராஜாவை நினைத்துச் சிரித்தனர்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை



குந்தவை நாச்சியார்

ராஜராஜனுக்கு ஒரு சகோதரி, குந்தவை. இதனால், அடுத்து ஆட்சியில் அமரப் போகிறவர் யார் என்ற கேள்வி எழுந்தது.

இன்னொரு மகனான அருண்மொழி (ராஜராஜனின் இயற்பெயர், அருண்மொழிவர்மன் அல்லது அருண்மொழிப் பெருமாள்.

பெருமாள் என்றால் அரசன் என்று அர்த்தம். அரசனைப் பெருமாள் என்று அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது) என்கின்ற ராஜராஜன் தான் மன்னராவார் என்கிற எதிர்பார்ப்பு இருந்த நிலையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

சரியான வரிசைப்படி மன்னராகியிருக்க வேண்டிய மதுராந்தக உத்தம சோழன், சிறுவன் என்கிற காரணத்தால் முன்பு நிராகரிக்கப்பட்டார். இப்போது அவர் அரசுரிமை கோரினார்.

இங்கே ஓர் இடைச் செருகல்- கல்கியின் பொன்னியின் செல்வன், சோழர்களின் வரலாற்றைப் பின்புலமாக வைத்து எழுதப்பட்ட ஒரு புணைவு.

பல இலட்சக்கணக்கான தமிழர்கள், சோழர்களின் வரலாற்றை பொன்னியின் செல்வன் வழியாகவே நன்கு புரிந்து கொண்டார்கள்.

ஆதித்த கரிகாலனின் மரணம் பற்றி எழுதுகிற கல்கி, பரிதாப உணர்வில் உத்தம சோழனை மன்னித்து விட்டு, ஆதித்த கரிகாலன் மர்மமான சதியால் கொலை செய்யப்பட்டதாகவே தன் கதையில் சொல்கிறார்.

ஒரு சோழமன்னன் மேல் கொலைப்பழி விழுவதை விரும்பாத கல்கி அவ்வாறு எழுதிவிட்டார்.

கல்வெட்டுக்களில் உள்ள ஆதாரங்களின்படி, இரண்டாம் ஆதித்தனுக்கு அடுத்து மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டிய ராஜராஜன், அதுவரை கட்டிக்காத்த அரசு மரபுப்படி உத்தமசோழனே மன்னராகட்டும் என்று சொல்லிவிட்டார்.

உத்தம சோழன் விரும்பும் வரை அரசாளத் தாம் சம் மதிப்பதாக அவர் கூறியது அதுவரை சோழர் வரலாறு காணாத ஒன்று.

உத்தமசோழனுக்கு ஏராளமான துணைவிமார்கள். மதுராந்தகன், கண்டராதித்தன் என்கிற ஒரு மகனும் உண்டு.

இவர்தான் பிற்காலத்தில் ராஜராஜனுக்கு உற்ற தோழராக இருந்த தன் தந்தை செய்த பாவக் கணக்குகளைத் தீர்த்தார்.

ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டு மரணமடைந்தால் குற்றவாளியைப் புதிய மன்னர் விரைவில் கண்டுபிடித்து விடுவார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

சோழமன்னர் என்றாலும் நற்பண்புகளின் உருவமாகத்தான் இருக்க வேண்டுமா? மனித இயல்பில் உள்ள குரோதம், சூழ்ச்சி, சாகசம், பொய் முதலியவை மன்னர்களுக்கும் பொதுவானதாகத் தானே இருக்க வேண்டும்.

இந்தப் பொய்க்கு கண், காது, மூக்கு சேர்ப்பிப்பதில் உத்தமசோழன் வெற்றி கண்டார். அவருடைய நிஜமான முகம் பற்றி மக்களுக்குப் பின்னால் தான் தெரியவந்தது.

சரி இங்கே இன்னொரு கேள்வி எழவேண்டும். ஒருவேளை, ராஜராஜனை அப்பாவி, பிழைக்கத் தெரியாதவன் என்றெண்ணி உத்தமசோழன் அடுத்ததடையை உண்டாக்கியிருந்தால்? அதாவது தமக்குப் பிறகு, தன் மகனான மதுராந்தகன் கண்டராதித்தனை அரியணையில் அமரச் செய்திருந்தால்? அப்போதும் சத்திரிய தர்மத்தின்படி ஆட்சிக்கட்டிலை விட்டுக் கொடுத்திருப்பாரா ராஜராஜன்.

(தொடரும்)

> வினைப் பயனை ஒருவன் அனுபவித்தே தீர வேண்டும். யாரும் அதிலிருந்து தப்பிக்க முடியாது.
> – சாரதாதேவி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விதி வலியது; ஆயினும் வெல்லவும் வழி உண்டு

மன்னன் ஒருவரின் சாதகத்தை ஆராய்ந்த சோதிடர்கள் அந்தணர் ஒருவரைக் கொல்லுகின்ற பலன் மன்னனுக்கு உண்டு எனக் கணிக்கின்றனர்.

சோதிடர்களின் கணிப்பைக் கேள்வியுற்ற மன்னன் அதிர்ந்து போகிறான்.

பிராமணரைக் கொன்றால் கொன்றவரை பிரமகத்திதோசம் பற்றிக் கொள்ளும்

எனவே இதிலிருந்து விடுபட்டாக வேண்டும் என மன்னன் எண்ணுகிறான்.

மறுநாள் சோதிட விற்பன்னர் சபை கூடுகிறது. அந்தணரைக் கொல்லும் விதியில் இருந்து மன்னனைக் காப்பாற்றுவது பற்றி அவர்கள் ஆராய்கின்றனர்.

மகாயாகம் செய்தால் பிராமணனைக் கொல்லும் விதியினின்றும் மீள முடியும் என்பதாக சோதிடர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

சோதிடர்களின் ஆலோசனைப்படி மகா யாகத்துக்கான ஏற்பாடுகள் நடந்தன.

மிகப்பிரமாண்டமான மகாயாக குண்டம் அமைத்து யாகம் தொடங்குகிறது.

இரண்டு மூன்று நாட்களென யாகம் நீண்டு செல்ல, யாக குண்டத்தின் அருகிலிருந்து அர்ப்பணம் செய்யும் அந்தணச் சிவாச்சாரியர் சற்று அயர்ந்து விடுகிறார்.

கூடவே தன்னை ஒரு சிங்கம் விரட்டுவதாகவும் கனவு காண்கிறார்.

யாக குண்டத்தின் அருகில் இருக்கின்ற மன்னன் அந்தண சிரேஷ்டர் உறங்குவதை அவதானிக்கிறான்.

உறக்கம் காரணமாக யாக குண்டத்துக்குள் அந்தணர் வீழ்ந்து விடுவாரோ என்று பயந்த மன்னன்; தன் அருகில் இருந்த தர்ப்பை புல்லை எடுத்து அந்தணரைத் தொட,

தன்னை சிங்கம் துரத்துவதாகக் கனவு கண்டிருந்த அந்தணர் தர்ப்பைப் புல் பட்டதும் சிங்கம் தன்னைப் பிடித்து விட்டதாக நினைந்து அலறி அடித்து யாக குண்டத்துக்குள் வீழ்ந்து இறந்து போனார்.

எந்தச் சம்பவம் நடைபெறக்கூடாது என்பதற்காக யாகம் நடத்தப்பட்டதோ அந்தச் சம்பவம் நடந்தாயிற்று.

இங்குதான் விதி வலியது என்பது உறுதி செய்யப்படுகிறது.

மன்னன் தர்ப்பைப் புல்லால் அந்தணரைத் தொட்டிருக்காவிடில் அவர் யாக குண்டத்தில் வீழ்ந்திருக்க மாட்டார்.

ஆனால் அந்தணரைக் காப்பாற்றும் பொருட்டே மன்னன் தர்ப்பைப் புல்லால் அவரைத் தொட்டிருந்தான்.

இதன் காரணமாக அந்தணரைக் கொன்ற பாவத்தினின்றும் மன்னன் விடுதலை பெறுகிறான்.

அதாவது மன்னனின் நோக்கம் அந்தணரைக் காப்பாற்றுவதேயன்றி, அவரைக் கொல்வதல்ல.

நோக்கம் கருதியே பாவ புண்ணியம் தீர்மானிக்கப்படுவதால், பிரமகத்தி தோசத்தினின்றும் மன்னன் நீங்கிக் கொள்கிறான்.

ஆக, விதி வலியதாயினும் அதனை வெல்ல வழி உண்டு.

எனவே நடைபெறப் போகும் பொதுத் தேர்தலை தமிழ் மக்கள் தம் விதியை வெல்லும் வழியாக ஆக்க வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

## முதலைக்கு இடமாற்றம்

(முறிகண்டி)

மக்களை அச்சுறுத்தி வந்த முதலை வன ஜீவராசி திணைக்களத்தினால் பிடிக்கப்பட்டு வேறு இடத்தில் விடப்பட்டது.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் மட்டுவில்நாடு மேற்கில் உள்ள மகிழங்கட்டு குளத்தில் குறித்த முதலை அச்சுறுத்தலாக காணப்பட்டுள்ளது.

குளத்திற்கு செல்லும் கால்நடைகளை வேட்டையாடி வந்ததுடன் மக்களையும் அச்சுறுத்தி வந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த முதலையானது பொதுமக்கள் மற்றும் வனவளத் திணைக்கள அதிகரிகளின் உதவியுடன் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கடந்த புதன்கிழமை பிடிக்கப்பட்டுள்ளது.

பிடிபட்ட முதலையை பாதுகாப்பாக அச்சுறுத்தலற்ற பகுதியில் விடுவித்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (5-100)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பலாலி வீதி திருநெல்வேலி சந்தியிலிருந்து பலாலி வீதி வேம்படி சந்தி வரை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில்பிள்ளையார்கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரிய குளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்திவரை, கம்பஸ்லேன், திருநெல்வேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், Bright Inn, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதி சந்தி வரை, மகாத்மா வீதி, முனீஸ்வரன் வீதி, கந்தப்பசேகரம் வீதி, யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலையின்மூன்றுமாடிக் கட்டடத்தொகுதி, கொமர்ஷல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, Tilko விடுதி, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆண்கள் விடுதி, யாழ்ப்பாணம் கார்கில்ஸ் பி.எல்.சி, அபி கட்டடம், யாழ் ஹொட்டல்பிறைவேற் லிமிட்டெட், யாழ்.மதர் கெயார் பிறைவேற் லிமிற்ரெட், பொம்மைவெளி, நாவாந்துறை, முத்தமிழ் வீதி, மீனாட்சிபுரம், பண்ணை சுற்றுவட்ட வீதி, கண்ணகிபுரம், பண்ணை சுகாதாரக் கிராமம், யாழ் சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்.கோட்டை பிரதேசம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** இரத்தின புரத்திலிருந்து இரணைமடு வரை, திருவையாற்றிலிருந்து இரணைமடு வரை, ஜெயந்திநகர், செல்வநகர், கனகபுரம், அம்பாள் குளம், உருத்திரபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள் குளம், அக்கராயன் குளத்திலிருந்து வன்னேரிக்குளம் வரை, ஜெயபுரத்திலிருந்து வலைப்பாடு வரை, பல்லவராயன்கட்டிலிருந்து வெள்ளாங்குளம் வரை, நீதிபுரம், அம்பகாமம், ஒலுமடுவிலிருந்து 3 ஆவது மைல்கல்வரை, கற்சிலைமடுவிலிருந்து முத்தையன்கட்டுகுளம் வரை, வற்றாப்பளை, மாமுனை, மாஞ்சோலை, ஒட்டுசுட்டான் சந்தியிலிருந்து நெடுங்கேணியூடாக வெடிவைத்த கல் வரை, கருவேலங்கண்டல், குளவிசுட்டான், நயினாமடு, மதியாமடு, மாங்குளம், வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம், செல்வபுரம், ஒட்டறுத்த குளம், மூன்றுமுறிப்பு, பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசங்குளம், விநாயகபுரம், அனிஞ்சியன்குளம், மல்லாவி, யோகபுரம், தேராங் கண்டல், தெனியங்குளம், துணுக்காய், கல்விளான், ஆனந்தபுரம், கிளிநொச்சி வைத்தியசாலை, பாரதிபுரம், கிருஸ்ண புரம், மலையாளபுரம், அறிவியல்நகர், முறிகண்டி, கொக்காவில், ஐயன் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## முல்லையில் 95 சதவீத வாக்களிப்பு

(முல்லைத்தீவு)

பொதுத்தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கள் விறுவிறுப்பாக நடந்துவரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 13.14 மற்றும் 15 ஆம் திகதிகளில் 95 வீதமானோர் வாக்களித்துள்ளனர்.

இதுதவிர தேர்தல் விதிமுறைகள் மீறல் தொடர்பில் இதுவரை 27 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 4 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களின் ஓய்வூதியத்தைப் பெறும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

எனவே அனைவரையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஜ-4-5)

## பொதுக்கூட்டம் இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக இரத்து செய்யப்பட்டுள்ளதென மேற்படி சங்கத் தலைவா அறிவித்துள்ளார். (2-5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நரகத்தைச் சொர்க்கமாக மாற்றுவதும் மனம்; சொர்க்கத்தை நரகமாக மாற்றுவதும் மனம். -தாயுமானவர்.**

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நான்கு வித மனப்பான்மைகள்

இன்பம், துன்பம், புண் ணியம், பாவம் போன்ற விட யங்களில் முறைப்படியே நட்பு, கருணை, மகிழ்ச்சி, அலட்சியம் இவற்றைக் கைக்கொள்வதால் சித்தம் அமைதி அடைகிறது.



இந்த நான்குவிதக் கருத்துக்கள் நம்மிடம் இருக்க வேண்டும். எல்லோரிடமும் நட்புக்கொள்ள வேண்டும்.

துன்பப்படுகிறவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும். பிறர் மகிழ்ச்சியடைந்தால் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

தீயவர்களிடம் அலட்சியமாக இருக்க வேண்டும். நம் முன் வரும் எல்லா விடயங்களிலும் இந்த நான்குவித மனப் பான்மைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நல்ல பொருளாக இருந்தால் நட்பும் துன்பத்தில் இரக்கமும் நல்ல விடயத்தில் மகிழ்வும் தீய விடயங்க ளில் அலட்சியமும் கொள்ள வேண்டும்.

நம்முன் வரும் விடயங்களில் இத்தகைய மனப்பான்மைகளைக் கொள்வது மனதிற்கு அமைதியைத் தரும்.

தினசரி வாழ்க்கையில் நமக்கு வரும் சிக்கல்களுள் பலவும் மனதை இந்த வழியில் நிறுத்த முடியாததால் ஏற்படுபவையே. (தொடரும்)

# ஐ.எஸ்.ஐ.எஸ். இல் பயிற்சி பெற்று நாடு திரும்பிய ரிம்சானை விசாரிப்பதை எஸ்.ஐ.எஸ். தடுத்தது

## நாலக டி சில்வா சாட்சியம்



(கொழும்பு)

**ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் பயிற்சி பெற்றுவிட்டு நாடு திரும்பியதாக நம்பப்பட்ட நிலாப்தீன் ரிம்சான் என்பவரை விமான நிலையத்தில் வைத்து, ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்று, மேலதிக விசாரணைகளுக்கு தயாரான போது தேசிய உளவுச் சேவை (எஸ்.ஐ.எஸ்.) பிரதிப் பணிப்பாளர் சரத்குமார, அவ்வாறு விசாரிப்பதை நிறுத்துமாறு கோரியதாகவும் பொலிஸ்மா அதிபர் ஊடாக அதற்கான எழுத்துமூல உத்தரவும் தமக்கு அனுப்பப்பட்டதாகவும் ரி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் அவர் மீளவும் சாட்சியமளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில், அவசர நிலைமை ஒன்றின் போது அதனைக் கையாள எந்தத் திட்டங்களும் இருக்கவில்லை எனவும் தேசிய உளவுச் சேவைக்கும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கும் இடையே சுமுக உறவுகள் இருக்கவில்லை எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தனது சாட்சியத்தில் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அதிகாரம்) 2 ஆம் அத்தியாயத்தின் கீழ் கடந்த 2019 செப்டம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

ஆணைக்குழுவின் தலைவர் மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி ஜனக் டி சில்வாவின் தலைமையிலான மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, ஓய்வுபெற்ற நீதிபதிகளான நிஹால் சுனில் ரஜபக்ஷ, அத்தப்பத்து லியனகே பந்துல குமார அத்தப்பத்து, ஓய்வுபெற்ற அமைச்சு செயலர் டபிள்யூ.எம்.எம்.அதிகாரி ஆகியோர் முன்னிலையில் குறித்த சாட்சிப் பதிவுகள் இடம்பெற்றன.

இதன்போது அரச சிரேஷ்ட சட்டவாதி சஞ்ஜீவ திஸாநாயக்கவின் கேள்விகளுக்கு பதிலளித்தவாறு சாட்சியமளித்த நாலக டி சில்வா தொடர்ந்து தெரிவிக்கையில், "கடந்த 2015 ஆம் ஆண்டு பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக அப்போதைய பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் என்னை நியமித்தார்.

அவ்வாறு நான் நியமிக்கப்பட்ட பின்னர், அவசரகாலச் சூழ்நிலையில் செயற்படுவதற்கான திட்டம் மற்றும் கொள்கையைப் பற்றி புலனாய்வு ஆய்வுக்கூட்டங்களில் எப்போதும் கேள்வி எழுப்பி வந்தேன்.

"2015 இற்குப் பிறகு இந்த உளவுத்துறை மறு ஆய்வுக் கூட்டங்களின் போது, பாதுகாப்புச் செயலாளரும் பிற அதிகாரிகளும் ஒரு அவசர நிலைமையின் போது செயற்படும் உடன் பதிலடி திட்டத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

நான் மீண்டும் நாட்டில் ஒரு போரைத் தொடங்கப் போகிறேன் என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை இருந்தது.

அதனால் பாதுகாப்பு செயலருக்கும் எனக்குமிடையே சில கசப்பான அனுபவங்கள் இருந்தன. இந்நிலையில் நான் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தின் பின்னர் உளவுத்துறை மறு ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்கவில்லை.

துருக்கி பயங்கரவாதக் குழுவான ஃபோடோ தொடர்பாக விசாரணை செய்யாமை தொடர்பில் 2017 செப்டெம்பர் 24 அன்று இடம்பெற்ற உளவுத்துறை மறு ஆய்வுக் கூட்டத்தில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன என்னை விமர்சித்தார்.

அத்தகைய பயங்கரவாத அமைப்பு தொடர்பில் தேசிய உளவுச் சேவை (எஸ்.ஐ.எஸ்) மூலம் தனக்கு ஒருபோதும் தகவல் கிடைக்கவில்லை. அப்படி இருக்கையில் எவ்வாறு விசாரணை நடத்த முடியும்.

இந்தச் சம்பவம் குறித்து நான் மிகவும் வருத்தப்பட்டேன். குறிப்பிட்ட மறு ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகும் கூட, ஃபோடோ அமைப்பு தொடர்பான உளவுத் தகவல்களை தேசிய உளவுச் சேவைப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன எனக்கு ஒருபோதும் தெரிவிக்கவில்லை. அதுதான் நான் கலந்துகொண்ட கடைசி உளவுத்துறை மறு ஆய்வுக் கூட்டம்.

கடந்த 2018 ஆம் ஆண்டு, ஐ.எஸ். ஐ.எஸ். இல் பயிற்சி பெற்றதாக கருதப்படும் நிலாப்தீன் ரிம்சான் என்பவரை ரி.ஐ.டி. விமான நிலையத்தில் வைத்து அவர் நாடு திரும்பிய போது பொறுப்பேற்று மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது தேசிய உளவுச் சேவை பிரதிப் பணிப்பாளர் சம்பத் குமாரா, என்னைத் தொடர்பு கொண்டு, இந்த விடயம் தொடர்பில் தேசிய உளவுச் சேவை தனியான விசாரணை ஒன்றினை நடத்தி வருவதால் விசாரணையை தொடர வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

ரிம்சானை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று குமாரா என்னிடம் கேட்டார். ரிம்சான் அவர் ஏன் நாடு திரும்பினார் என்பதை அறிய விசாரணை செய்ய வேண்டும் எனவும் அதனால் நாங்கள் கேள்வி கேட்க வேண்டும் என்று நான் சொன்னேன். அது ஐ.எஸ். தனது போராளிகளை இழந்து கொண்டிருந்த நேரம். அவர்களின் வெளிநாட்டுப் போராளிகளை வீட்டிற்கு அனுப்பிக்கொண்டிருந்த கால கட்டம்.

அப்போது நான் பொலிஸ்மா அதிபரிடம் பேசுமாறும், தனக்கு எழுத்து மூலம் அது குறித்த கோரிக்கையை தருமாறும் கோரினேன். அதன் பின்னர் சம்பத் குமார எனக்கு கோரிக்கைக் கடிதம் அனுப்பினார்.

அதேநேரம், அது குறித்த விசாரணைகளைத் தொடர வேண்டாம் என பொலிஸ்மா அதிபரின் எழுத்துமூல உத்தரவும் அனுப்பப்பட்டது.

உண்மையில் இக்கால கட்டத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனாவின் அணுகுமுறை காரணமாக தேசிய உளவுச் சேவைக்கும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான உறவு மோசமடைந்திருந்தது.

2016 ஆம் ஆண்டில், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் விசேட அதிரடிப் படை ஊடாக சிறப்பு ஆயுதப் பயிற்சியுடன் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவோடு இணைக்கப்பட்ட 10 பேர் கொண்ட குழுவை உருவாக்குவது, அதற்கான பயிற்சியளிப்பது தொடர்பில் கலந்துரையாடினேன்.

அதற்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒப்புதல் அளித்தார். ஆனால் அதிரடிப் படையினர், அவர்களுடன் இணைக்கும் குழுவுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவது பயனற்றது என மறுத்தனர். பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக அவசரகால சூழ்நிலையை கையாள ஒரு விரைவான எதிர்வினை குழுவை உருவாக்க விரும்பியதாலேயே அத்தகைய கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு சிறப்பு கண்காணிப்பு வாகனம் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது. 2018 ஆம் ஆண்டில் அவ்வாகனம் ஊடாக சந்தேக நபர்களை அடையாளம் கண்டு கைது செய்த நடவடிக்கைக்குப் பின்னர் அவ்வாகனம் பயன்படுத்தப்படவே இல்லை.

குறிப்பிட்ட சிறப்புக் கண்காணிப்பு வாகனம் சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கான அம்சத்தைக் கொண்டுள்ளது" என்று அவர் சாட்சியமளித்தார். (ஐ-2)

## சிவில் பாதுகாப்புப்பிரிவு உத்தியோகத்தர் தன்னைத்தானே சுட்டுத்தற்கொலை

(கொழும்பு)

சிவில் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் தனது கடமைநேர துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை - புத்தங்கல பகுதியிலேயே குறித்த சிவில் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

## குணமடைந்தோர் 2012

(கொழும்பு)

நாட்டில் நேற்று புதன்கிழமை மேலும் 5 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களில், அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலை மற்றும் இரணவில வைத்தியசாலையிலிருந்து தலா இருவரும், ஒருவர் மினுவாங்கொடை இராணுவ வைத்தியசாலையிலிருந்தும் பூரண குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 2012 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ-4)

## வீதி விபத்தில்...

ளார்.

கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணம் பலாலி வீதியூடாகச் சென்ற இலங்கை போக்கு வரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் வீதியால் திரும்ப முற்பட்ட முச்சக்கரவண்டி மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியில் பய ணித்த ஜெகதேவன் சீதாமோகன் (வயது- 49) என்ற நபர் படுகாயமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## விரிவுரையாளர்...

பீடாதிபதி மற்றும் சட்டத்துறை தலைவர் ஊடாக அனுப்பி வைத்துள்ளார்.

இனி அவர் முழுநேர சட்டத்தரணி யாகவே செயற்படுவார்.

தான் பதவி விலகுவதற்கான காரண மாக பல்கலைக்கழக பேரவை தன்னை சட்ட தொழிலில் ஈடுபடுவதிலிருந்து தடை செய்துள்ளமையை காரணம் காட்டியுள் ளார்.

தன்னால் உயர் நீதிமன்றத்தில் தொட ரப்பட்டிருக்கும் வழக்கு விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டு கொண் டிருக்க தான் இந்த விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்று தனது இராஜினாமா கடிதத்தில் கலா நிதி குமாரவடிவேல் குருபரன் தெரிவித் துள்ளார். (ம-3)

## காங்கேசன்துறை...

ரயில்வே திணைக்களம் அறிவித்துள் ளது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பல ரயில் சேவைகளை மீண்டும் தொடங்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்தது.

அதனடிப்படையில் காங்கேசன்துறை - கோட்டை இடையிலான குளிரூட்டப்பட்ட நகர்சேர் தொடருந்து சேவை இன்று (ஜூலை 18), நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய நாட்களில் அதிகாலை 5.10 மணிக்கு கல்கிசையிலிருந்து புறப் படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதேபோன்று காங்கேசன்துறையி லிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட் டிருந்தது.

இந்நிலையில் ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஆசனங்களை முன்பதிவு செய்தவர் களுக்கான கொடுப்பனவு மீளச் செலுத் தப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-3)

## கைக்குண்டுடன்...

செய்யும் திட்டத்துடன் பயணித்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்த கைது நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வழிப்பறி, கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 22 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவை யிலுள்ள நிலையில் பொலிஸாரால் தேடப் பட்டு வந்துள்ளார்.

வவுனியாவில் சங்கிலி அறுப்பு குற்றத் துக்கு 3 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் சந்தேக நபரின் மனைவி வேறு ஒருவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்.

தனது மனைவியுடன் வாழ்ந்து வரும் நபரைக் கொலை செய்யும் நோக்குடன் சந்தேகநபர், உரும்பிராய் ஊடாக சாவகச் சேரிக்கு மற்றொருவருடன் பயணித்த போது, யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சந்தேகநபரின் இடுப்புப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

அத்துடன், கொள்ளையிடப்பட்ட 16 பவுண் நகைகள் மீட்கப்பட்டதுடன், அவ ற்றை கொள்வனவு செய்து, உடைமையில் வைத்திருந்து விற்பனை செய்த குற்றச் சாட்டுக்களின் கீழ் 3 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன் றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலி ஸார் தெரிவித்தனர். (ம-3.32)

## 12 வயதுடைய...

உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

139 பேரின் உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப் பட்டது. அவற்றில் இந்த 12 வயதுடைய வருக்கு (சிறுவனா, சிறுமியா என அறிவிக் கப்படவில்லை) மட்டுமே கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது என்று அவர் குறிப் பிட்டார்.

இதன்படி நாட்டில் நேற்று வரை கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 688 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் இதுவரை 2 ஆயிரத்து 12 பேர் முழுமையாகக் குண மடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். இதுவரை 11 கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

தற்போது, 665 பேர் வைத்திய சாலை களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## கம்பளையில்...

வாழ்வு நிலையத்தில் சேவை செய்த ஆலோசகரின் மகளுக்கே இவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட குழந்தை மற்றும் குழந்தை யின் தாய் IDH வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் குறிப்பிட் டுள்ளார்.

கடந்த 14ஆம் திகதி புனர்வாழ்வு நிலைய ஆலோசகருக்கு கொரோனா தொற்றியமை உறுதி செய்யப்பட்டதனை தொடர்ந்து அவரது குடும்பத்தில் 8 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

அதன்பின்னர் அவர்களிடம் மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளுக்கமைய குறித்த குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதியாகியுள்ளதாக வைத்தியர் குறிப் பிட்டுள்ளார்.

அதற்கமைய இதுவரையில் மத்திய மாகாணத்தில் முழுமையாக 10 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. (ம-3)

## யாழ்.தீவகத்தில்...

யாழ்ப்பாணத்துக்கு அண்மைக் கால மாக கஞ்சா போதைப்பொருள் வரத்து அதிகரித்துள்ளது.

இதில் வடமராட்சி கிழக்குத் தொடக்கம் சுழிபுரம் வரையான கடல் பகுதிகள் ஊடா கவே யாழ்ப்பாணம் குடாநாட்டுக்கு கஞ்சா போதைப்பொருள் இந்தியாவிலிருந்து எடுத்துவரப்படுவது வழமை.

எனினும் கடந்த சில மாதங்களில் முற் பகுதியிலிருந்து மண்டைதீவுப் பகுதியில் 600 கிலோ கிராமுக்கு மேற்பட்ட கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரச புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் முக்கிய புள்ளி தொடர்பில் தகவல் கிடைத் துள்ளதாக கொழும்புக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது.

யாழ்ப்புாணத்தில் வசிக்கும் ஒருவர் அண்மைக் காலமாக மண்டைதீவு மற் றும் அல்லைப்பிட்டி பகுதியில் நடமாடு கின்றார்.

அவர் கஞ்சா போதைப்பொருள் வியா பாரத்தில் ஈடுபடுவதுடன் பல கோடி ரூபாய் பெறுமதியான மாடி வீடுகளுக்கு உரிமை யாளராகவும் உள்ளார்.

அண்மைக்காலமாக மண்டைதீவுப் பகுதிக்கே அதிகளவு கஞ்சா போதைப் பொருள் கடத்தப்பட்டு வந்துள்ளன. நேற்று முன்தினமும் 111 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப் பட்டனர்.

அத்துடன், 50 கிலோ கிராம் கஞ்சா பொதி கடலில் மிதந்து வந்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டது.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டு கஞ்சா போதைப்பொருளை வியாபாரம் செய்யும் முக்கிய புள்ளி மண்டைதீவு மற்றும் அல்லைப்பிட்டி பகுதி களில் நடமாடுவது கண்டறியப்பட்டுள்ளது என்று அரச புலனாய்வுப் பிரிவினரால் அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-3)

## சுகாதார நடை...

அசாதாரண அரசிதழ் அறிவிப்பு எண் 2184/34, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி யால் தனிமைப் படுத்தப்பட்ட மற் றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத் தின் கீழ் இந்த அறி விப்பு வெளியிடப் பட்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற் றும் வாக்காளர்கள் பின்பற்ற வேண் டிய சுகாதார வழி காட்டுதல்கள் இதில் உள்ளடங்கியுள் ளமை குறிப்பிடத் தக்கது.

முன்னதாக இந்த வார ஆரம் பத்தில் தேசிய தேர் தல் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப்பிரிய சுகாதார வழி காட்டுதல் அடங்கிய வர்த்தமானி வெளி யிடப்படாவிட்டால் ஒகஸ்ட் 5ம் திகதி பாராளுமன்ற தேர் தலை நடத்து வதில் சிக்கல் ஏற் படும் என எச்சரித் திருந்தார்.

அத்துடன், இந்த வாரம் தேர் தல் ஆணைக்குழு வுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தை யில் பொது சுகாதார ஆய்வாளர்களும் இது குறித்து கவலை தெரி வித்திருந்த னர்.

இந்நிலையிலேயே, தற்போது குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


தன நிதானய
திகதி - 2020.07.17
சீட்டிழுப்பு இலக்கம் - 291
I 41 47 51 68

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2481
H 19 39 44 46

மஹஜன சம்பத
திகதி 2020/07/17
சீட்டிழுப்பு இலக்கம் 4186
P 3 9 6 6 7 8

நீரோகா
திகதி 17/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0687
மிதுனம் 06 29 32 60

மெகா பவர்
திகதி 17/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 553
L 22 10 29 33 80

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2864 வர்ணம் கரு நீலம் திகதி 17.07.2020
வெற்றி இலக்கங்கள் 19 32 47 48 துலாம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,680,502
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 599 வர்ணம்: பச்சை திகதி: 17.07 2020
V 29 62 70 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,715,880
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 983 வர்ணம்: ஊதா சீட்டிழுப்பு திகதி: 2020.07.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,814,970/-
வெற்றி இலக்கங்கள் 01 10 43 52 P

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 350 திகதி 17.07.2020 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 01 32 39 விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 55,597,668
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

# கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஏற்பட்ட சவாலை சிறந்த முறையில் வெற்றி கொள்வேன்

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அதிகரித்துள்ள பல மடங்குகளான சவால்களையும் சிறந்த முறையில் வெற்றி கொள்வேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மேலும் கூறியுள்ளதாவது, "நான் ஜனாதிபதியாக பதவியேற்ற காலப்பகுதியில் சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் தற்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சவால்கள் 10 மடங்குகளாக அதிகரித்துள்ளன. இந்த சவால்களையும் சிறந்த முறையில் வெற்றி கொள்வேன்.

இதேவேளை, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை உள்நாட்டு பொறியியலாளர்கள் மற்றும் நிறுவனங்களிடம் வழங்கத் தீர்மானித்துள்ளேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 100 மில்லி கிராம் ஹெரோயினுடன் இருவர் கைது

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வைத்து யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குருநகர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இரு இளைஞர்களை பொலிஸார் சோதனையிட்ட போது அவர்களிடம் இருந்து 100 மில்லி கிராம் ஹெரோயின் பக்கெட்டுக்கள் இரு நபர்களிடமும் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் அனலைதீவு மற்றும் கல்வியங்காடு பகுதியை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## காட்டு யானையின் தாக்குதலில் கணவன், மனைவி பலி

புத்தளம் - தம்பேயாய பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர். நேற்று வெள்ளிக்கிழமை காலை, தம்பேயாய பகுதியில் இறப்பர் பால் வெட்டிக் கொண்டிருந்த இருவரே இவ்வாறு காட்டு யானை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ம-3)

## யாழில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று மாலை பெட்ரோல் குண்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றின் மீது இனம் தெரியாத மர்ம கும்பல் ஒன்று பெற்றோல் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்த தாக்குதலில் வீட்டில் தரித்து நின்ற காரிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வீட்டின் சில பகுதிகளும் சேதமடைந்துள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)


இலங்கை விசா நீடிப்பு

VISA EXTENSION

FOR FOREIGN PASSPORT



(C-9624)

V2 TRAVELS 0768227499



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.06.2020
சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்
அமரர்
வேலுப்பிள்ளை இலட்சுமி
(கிங்கோ மேஜர் முரளி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியை மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

(3339)

சர்வோதய வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

குடும்பத்தினர்



CHEMISTRY

KaSubeesan

A/L மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு

வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

ஜூலை 26 (ஞாயிறு) 27 (திங்கள்)

- 800 நாட்களுக்கு மேற்பட்ட பாட அலகுகளை வெறும் 8 நாட்களில் கற்கும் வாய்ப்பு
- அலகு ரீதியான துரித மீட்டல்
  - Inorganic - 2 Days
  - Organic - 2 Days
  - Physical - 2 Days
  - General - 2 Days

அனுமதிக்கட்டணம் 1000/=

ஒவ்வொரு அலகிலும் 250MCQ, இறுதி 3 வருட Part ii வினாக்கள் கற்றுத் தரப்படும்

- அனைத்து மாணவர்களும் 80 புள்ளிகளுக்கு மேற்பட்ட பாடப்பரப்பினை 8 நாட்களில் கற்றுக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு
- ஆர்வம் உடைய மாணவர்கள் 'A' சித்தி பெற்றுக் கொள்ள உறுதுணையாக இருக்கும்

அனுமதிகள் ஜூலை 18 லிருந்து 23 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

077 430 7829 / 075 566 3375







இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.